# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 30 புதன்கிழமை (13-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:199


# அரசில் இருந்து வெளியேறுவதற்கு தயாராகின்றது முஸ்லிம் காங்கிரஸ்

## மிகவிரைவில் முடிவு

கொழும்பு,ஜூன்13

**பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீடம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

**இது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஓரணியிலும் -

தேசிய ஐக்கிய முன்னணித் தலைவரும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் ஓரணியிலும் -

நிற்பதால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுறும் நிலை காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

பேரியல் அஷ்ரப்பின் அணி தொடர்ந்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு வழங்கும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

ஆனால் ரவூப் ஹக்கீம் மேலும் ஐந்து எம்பிக்களுடன் சேர்ந்து அரசை விட்டு வெளியேறும் தீவிரத்தில் இருப்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### தனிநிர்வாக மாவட்டம் கோரும்

## அடிப்படைவாதிகளை துரத்திவிட்டு தேசிய அரசை அமைக்கவேண்டும்

### அமைச்சர் திஸநாயக்க அறிவுரை

கொழும்பு,ஜூன்13

மதத்துக்கு, இனத்துக்கு, குலத்துக்கு தனித்தனி நிர்வாக மாவட்டம் வேண்டும் என்று கேட்கும் அடிப்படைவாதிகளைத் துரத்திவிட்டு நாட்டின் மீது அன்பு கொண்டவர்களைக் கொண்டு தேசிய அரசு அமைக்க வேண்டும் என்று அமைச்சரும், சுதந்திரக்கட்சியின் செயலாளருமான எஸ்.பி.திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் பேசுகையில் -

சில சிறுபான்மை இனக்கட்சிகள் நாட்டின் தேசிய தேவைகளைக் கண்டு கொள்ளாமல் சுயநலத்துக்காகச் செயற்பட்டு அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றன - என்றும் குறிப்பிட்டார்.

(உ-3)

## சு.கவுக்கு மாறிய மூவரும் அன்றே ஐ.தே.க. திரும்பினர்!

கொழும்பு,ஜூன்13

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்ததாகக் கூறப்பட்ட ஐ.தே.கவின் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்கள் மூவரும் தாம் ஐ.தே.கட்சியிலேயே தொடர்ந்தும் இருப்பதாக நேற்று அறிவித்துள்ளனர்.

ஏ.ஆர்.எம்.அருஸ், கனிஸ் கபஸநாயக்க, சம்பத் ரம்புக்கனே ஆகிய அந்த உறுப்பினர்கள் மூவரும் நேற்று ஐ.தே.கட்சி அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

தாங்கள் கட்சி மாறியதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது ஒரு நாடகம் என்று அவர்கள் குறிப்பிட்டனர். (உ-3)

## குண்டுப் புரளியால் விமானம் மீண்டும் தரையிறக்கப்பட்டது

### கட்டுநாயக்காவில் சம்பவம்

கொழும்பு,ஜூன்13

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்று பிற்பகல் 3.20 மணிக்கு கட்டார் நோக்கி 134 பயணிகளுடன் புறப்பட்ட விமானத்தில குண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த அநாமதேய தொலைபேசி அழைப்பை அடுத்து -

அந்த விமானம் மீண்டும் தரையிறக்கப்பட்டது.

'ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸை'ச் சேர்ந்த - யூ.எல்.201 பயண இலக்கமுடைய - விமானத்திலேயே அது புறப்பட்டு பத்து நிமிடத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக அநாமதேய தொலைபேசி அழைப்பு ஒன்று விமான நிலைய கட்டுப்பாட்டு நிலையத்துக்குக் கிடைத்தது.

அவசர அவசரமாகத் தகவல் அனுப்பப்பட்டு, மீண்டும் கட்டுநாயக்காவில் தரையிறக்கப்பட்ட அந்த விமானத்தில் குண்டு இருக்கின்றதா என்பதை அறிய மோப்ப நாய்கள் கொண்டு துருவித் துருவி சோதனைகள் நடத்தப்பட்டன.

அந்த விமானத்தில் குண்டு இல்லை என உறுதிசெய்யப்பட்டதை அடுத்து விமானம் பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டது.

(உ-3)

## ஏறாவூரில் கான்ஸ்டபிள் சுடப்பட்டார்

மட்டக்களப்பு,ஜூன்13

மட்டக்களப்பு ஏறாவூர் ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று நண்பகல் கடமையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பிஸ்ரல் குழுவால் சுடப்பட்டார்.

படுகாயமடைந்த அவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-3)

## உகணையிலிருந்து சிங்களமக்கள் வெளியேற்றம்!

மட்டக்களப்பு,ஜூன்13

அம்பாறை மாவட்டத்தின் உகணைப் பிரதேசத்தில் இருந்து சிங்களமக்கள் வெளியேறிவருவதாக திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸநாயக்க பிரதமரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அச்சுறுத்தலை அடுத்தே அவர்கள் வெளியேறிவருவதாகவும் -

அவர்களின் பிரதேசத்தைப் பாதுகாகக விசேட திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-3)

## புறக்கோட்டையில் துப்பாக்கிச் சூடு! ஒருவர் சாவு!!

கொழும்பு,ஜூன்13

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையில் நேற்றுப் பிற்பகல் 5.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தால் அங்கு பரபரப்பு நிலவியது.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களே தங்களுக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் -

அதில் ஒருவர் உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## அந்தோனியார் ஆலய கூட்டுத் திருப்பலி நேரடி ஒலிபரப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்13

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ள யாழ். ஆயர் தலைமையிலான கூட்டுத் திருபபலி தொடர்பான நிகழ்ச்சியை யாழ்.ஒலிபரப்புச் சேவை நேரடியாக அஞ்சல் செய்யவிருக்கின்றது.

ஆலய உற்சவத்தை ஒட்டிய திருச்சொரூபத் தேர்பபவனி இன்று பிறபகல் 4.30 மணிக்கு இடம்பெறவிருப்பதாக யாழ்.ஆயர் இல்ல வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

## தனங்களப்பில் கண்ணிகள் மீட்பு

கொழும்பு,ஜூன்13

தனங்களப்புப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 76 ஆள்களுக்கு எதிரான கண்ணிகளும் ஒரு ரி81 ரக மோட்டார் குண்டும் மற்றும் வெடி பொருள்களும் மீட்கப்பட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (3)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் புறப்படுவது நேற்றுத் தாமதம்

யாழ்ப்பாணம்,ஜூன்13

பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்று மாலை காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்குப் புறப்பட வேண்டிய 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் கடற்கொந்தளிப்பு மற்றும் காலநிலை சீரின்மை காரணமாக நேற்று முன்னிரவு வரை பயணிகளுடன் காங்கேசன்துறை துறைமுகதுக்கு வெளியே தொடர்ந்து பயணம் செய்யாமல் காத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் இருந்து புறப்படடு நேற்றுக்காலை காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்த இந்தககப்பல் திருமலையில் இருந்து வந்த பயணிகளை அங்கு இறக்கிவிட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பயணிகளை ஏற்றிக்கொண்டு

(14 ஆம் பக்கம் பார்க்க)

### அவசரகால விதிகளின் கீழ்

## கைதாவோரை 14 நாள்களுக்குள் நீதிவானின் முன் ஆஜர் செய்க!

### உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவு

கொழும்பு,ஜூன்13

அவசரகாலச் சட்டத்தின் மறுசீரமைக்கப்பட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை கைது செய்து 14 நாள்களுக்குள் நீதிவான் முன் ஆஜர் செய்ய வேண்டும் என்று கொழும்பு உயர்நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட குழு இந்த விடயம் குறித்து ஆராய்ந்து வந்ததாகவும -

அதன் பின்னரே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அவசரகாலச் சட்ட விதிகளின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## டாக்டர்கள் வேலைநிறுத்தம் இன்றும் தொடர்கின்றது

யாழ்ப்பாணம்,ஜூன்13

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் டாக்டர்களின் மேலதிகக் கொடுப்பனவு விவகாரம் தொடர்பான கோரிக்கைக்கு சுகாதார அமைச்சிடமிருந்து சாதகமான பதில் இன்னும் கிடைக்காமையினால் இன்று மூன்றாவது நாளாகவும் டாக்டர்களின் வேலைநிறுத்தம் தொடரவிருக்கின்றது.

வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கொழும்பிலுள்ள தாய்ச் சங்கப் பிரதிநிதிகள் நேற்றுக் கூடி வடக்கு - கிழக்கு டாக்டர்களின் கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்தனர். எனினும் அது தொடர்பான முடிவுகள் எதுவும் நேற்று இரவுவரை வெளியிடப்படவில்லை.

இதேவேளை யாழ்நகரிலுள்ள 51

(14 ஆம் பக்கம் பார்க்க)

### கொக்கட்டிச்சோலையில் நிகழ்ந்த

## படுகொலைகளின் 10ஆம் ஆண்டை நினைவு கூர்ந்து நேற்றுத் துக்கம்

மட்டக்களப்பு,ஜூன்13

மட்டககளப்பு கொக்கட்டிச்சோலையில் 91ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் திகதி 150 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பத்தாம் ஆண்டுப் பூர்த்தியை நினைவுகூரும் முகமாக மட்டக்களப்பில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த துக்கதின நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் உணர்வுபூர்வமாகப் பங்கேற்றனர்.

கொக்கட்டிச்சோலையில் உள்ள பாடசாலைகள், சந்தைகள் ஆகியன மூடப்பட்டிருந்தன. எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

கொக்கட்டிச்சோலை சிவன் கோயிலிலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன. (உ-3-4)

## பிரிட்டிஷ் தூதுவர் 21இல் யாழ்.வருவார்

யாழ்ப்பாணம்,ஜூன்13

கொழும்பில் உள்ள பிரிட்டனுக்கான தூதர் லிண்டா டபீல்ட் அம்மையார் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

இரு தினங்கள் இங்கு தங்கியிருக்கும் அவர் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடி யாழ்.நிலைமை குறித்து கேட்டறிவார்.

யாழ்.விஜயத்துக்கு முன்னோடியாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் நேற்று முதல சந்தித்து வருகின்றார். (உ-3)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜுன்13

யாழ்மாவட்டத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் செல்வதற்கான பயண அனுமதிக்கு விண்ணப்பித்தவர்களில் இம்மாதம் 12ஆம் திகதி வரையும் அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| (182209ஏ) | (183609ஏ) | (183609பி) |
| (185792ஏ) | (185792பி) | (193791ஏ) |
| (194738ஏ) | (194738பி) | (194812ஏ) |

### கரவெட்டி

| | | |
|---|---|---|
| (143598ஏ) | (143598பி) | (172215ஏ) |
| (172215பி) | (180466ஏ) | (182368ஏ) |
| (182368பி) | (182368சி) | (182368டி) |
| (183558ஏ) | (188132ஏ) | (188132பி) |
| (190000ஏ) | (190000பி) | (190000சி) |
| (190043ஏ) | (192558ஏ) | (192558பி) |
| (192558சி) | (192558டி) | (192703ஏ) |
| (192717ஏ) | (192733ஏ) | (192733பி) |
| (192733சி) | (192744ஏ) | (192744பி) |
| (192790ஏ) | (192805ஏ) | (192809ஏ) |
| (193829ஏ) | (193829பி) | (193829சி) |
| (193878ஏ) | (193880ஏ) | (193880பி) |
| (193880சி) | (193880டி) | (193880ஈ) |
| (193957ஏ) | (193958ஏ) | (193976ஏ) |
| (193976பி) | (193987ஏ) | (194011ஏ) |
| (194074ஏ) | (194074பி) | (194078ஏ) |
| (194098ஏ) | (194107ஏ) | (194107பி) |
| (194107சி) | (194107டி) | (194118ஏ) |
| (194118பி) | (194119ஏ) | (194130ஏ) |
| (194130பி) | (194134ஏ) | (194134பி) |
| (194137ஏ) | (194137பி) | (194149ஏ) |
| (194184ஏ) | (194446ஏ) | (194506ஏ) |
| (194506பி) | (194510ஏ) | (194512ஏ) |
| (194512பி) | (194532ஏ) | (194542ஏ) |
| (194554ஏ) | (194554பி) | (194580ஏ) |
| (194580பி) | (194580சி) | (194580டி) |
| (194618ஏ) | (194626ஏ) | (194631பி) |
| (194638ஏ) | (194638பி) | (194638சி) |
| (194639ஏ) | (194640ஏ) | (194652ஏ) |
| (194652பி) | (194661ஏ) | (194667ஏ) |
| (194667பி) | (194667சி) | (194667டி) |
| (194667ஈ) | (194685ஏ) | (194686ஏ) |
| (194686பி) | (194696ஏ) | (194700ஏ) |
| (194700பி) | (194714ஏ) | (194718ஏ) |
| (194747ஏ) | (194747பி) | (194748ஏ) |
| (194749ஏ) | (194753ஏ) | (194754ஏ) |
| (194774ஏ) | (194774பி) | (194786ஏ) |
| (194786பி) | (194786சி) | (194786டி) |
| (194786ஈ) | (194805ஏ) | (194811ஏ) |
| (194811பி) | (194813ஏ) | (194813பி) |
| (194821ஏ) | (194821பி) | (194823ஏ) |
| (194823பி) | (194835ஏ) | (194840ஏ) |
| (196401ஏ) | (196405ஏ) | (196417ஏ) |
| (196420ஏ) | (196429ஏ) | (196439ஏ) |
| (196439பி) | (196444ஏ) | (196460ஏ) |
| (196460பி) | (196469ஏ) | (196470ஏ) |
| (196481ஏ) | (196481பி) | (196482ஏ) |
| (196485ஏ) | (196492ஏ) | (196497ஏ) |
| (196497பி) | (196497சி) | (196574ஏ) |
| (196576ஏ) | (196599ஏ) | (196599பி) |
| (196605ஏ) | (196622ஏ) | (196622பி) |
| (196622சி) | (196641ஏ) | (196641பி) |
| (196667ஏ) | (196710ஏ) | (196772ஏ) |
| (196777ஏ) | (196777பி) | (196777சி) |
| (196777டி) | (196778ஏ) | (196813ஏ) |
| (196828ஏ) | (198156ஏ) | (198324ஈ) |

### மருதன்கேணி

(194614ஏ)

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| (183851ஏ) | (189832ஏ) | (189832பி) |
| (189832சி) | (189832டி) | (189832ஈ) |
| (189869ஏ) | (190063ஏ) | (190176ஏ) |
| (190176பி) | (190176சி) | (190176டி) |
| (190176ஈ) | (190176எவ்) | (190176ஜி) |
| (190266ஏ) | (192648ஏ) | (192648பி) |
| (192793ஏ) | (192793பி) | (193821ஏ) |
| (193821பி) | (193821சி) | (193844ஏ) |
| (193844பி) | (193844சி) | (193983ஏ) |
| (194009ஏ) | (194044ஏ) | (194044பி) |
| (194050ஏ) | (194111ஏ) | (194111பி) |
| (194111சி) | (194111டி) | (194133ஏ) |
| (194133பி) | (194153ஏ) | (194154ஏ) |
| (194174ஏ) | (194174பி) | (194181ஏ) |
| (194181பி) | (194183ஏ) | (194183பி) |
| (194183சி) | (194183டி) | (194183ஈ) |
| (194188ஏ) | (194188பி) | (194188சி) |
| (194529ஏ) | (194566ஏ) | (194576ஏ) |
| (194576பி) | (194576சி) | (194576டி) |
| (194576ஈ) | (194576எவ்) | (194582ஏ) |
| (194582பி) | (194591ஏ) | (194591பி) |
| (194591சி) | (194597ஏ) | (194615ஏ) |
| (194615பி) | (194615சி) | (194673ஏ) |
| (194674ஏ) | (194674பி) | (194674சி) |
| (194674டி) | (194674ஈ) | (194683ஏ) |
| (194683பி) | (194688ஏ) | (194688பி) |
| (194688சி) | (194688டி) | (194688ஈ) |
| (194699ஏ) | (194699பி) | (194699சி) |
| (194699டி) | (194708ஏ) | (194708பி) |
| (194709ஏ) | (194709பி) | (194709சி) |
| (194725ஏ) | (194728ஏ) | (194762ஏ) |
| (194771ஏ) | (194792ஏ) | (194795ஏ) |
| (194795பி) | (194796ஏ) | (194796பி) |
| (194799ஏ) | (194799பி) | (194799சி) |
| (194799டி) | (194799ஈ) | (194800ஏ) |
| (194800பி) | (194800சி) | (194800டி) |
| (194802ஏ) | (194802பி) | (194802சி) |
| (194802டி) | (194802ஈ) | (194802எவ்) |
| (194802ஜி) | (194810ஏ) | (194818ஏ) |
| (194819ஏ) | (194819பி) | (194828ஏ) |
| (194829ஏ) | (194831ஏ) | (194831பி) |
| (194831சி) | (194831டி) | (194831ஈ) |
| (194834ஏ) | (194836ஏ) | (196404ஏ) |
| (196404பி) | (196428ஏ) | (196428பி) |
| (196434ஏ) | (196434பி) | (196436ஏ) |
| (196436பி) | (196443ஏ) | (196443பி) |
| (196445ஏ) | (196457ஏ) | (196462ஏ) |
| (196474ஏ) | (196479ஏ) | (196499ஏ) |
| (196508ஏ) | (196511ஏ) | (196618ஏ) |
| (196631ஏ) | (196636ஏ) | (196636பி) |
| (196639ஏ) | (196648ஏ) | (196660ஏ) |
| (196706ஏ) | (196706பி) | (196707ஏ) |
| (196707பி) | (196718ஏ) | (196722ஏ) |
| (196722பி) | (196724ஏ) | (196724பி) |
| (196732ஏ) | (196753ஏ) | (196755ஏ) |
| (196781ஏ) | (196781பி) | (196796ஏ) |
| (196856ஏ) | (196882பி) | (198324ஏ) |
| (198324பி) | (198324சி) | (198324டி) |
| (198324எவ்) | (198324ஜி) | |

(க-10)

# ஆலயக் கதவு திறக்க அருள்வேண்டி இரவு-பகல் தொடர் பாராயணம்

## இன்றுடன் 7 ஆவது நாளாக உடுவிலில்

யாழ்ப்பாணம்,ஜுன்13

உடுவில் ஸ்ரீ சொர்ண சித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில் பரிவார மூர்த்தியாக விளங்கும் அம்மன் வாசல் கதவு திறக்க அருள் வேண்டி கடந்த வியாழக்கிழமை முதலாகத் தொடர்ந்து இரவு பகலாகத் தேவாரத் திருமுறைகள் ஓதப்பட்டு வருகின்றன.

தேவார ஓதுவா மூர்த்திகள் ஒன்று சேர்ந்து இத்தேவாரத் திருமுறைகளை ஓதி வருகின்றனர். இன்று புதன்கிழமை கதவு திறக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த ஆலய அம்மனின் வாக்குபடியே கதவு அடைக்கப்பட்டது. கதவினைக் திறக்க அம்மன் அருள் வேண்டி திருமுறை இரவு பகலாகத் தொடர்ச்சியாக ஓதப்படுகின்றது.

இந்த ஆலயத்தில் கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் கதவு சாத்தப்பட்டுள்ளது. அத்திருக்கதவைத திறப்பதற்கு வேத பாராயணங்களும் தேவார பாராயணங்களும் நிகழ்த்தப்பட வேண்டும் என்பது அன்னையின் வாக்கு.

அன்னையின் வாக்கைச் சிரே மேற்கொண்டு அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர், உடுவில் பஜனைச் சபையினர் முதலானோர் இரவு பகலாகத் தொடர்ச்சியாகத் திருமுறைகளை இடைவிடாமல் ஓதிவருகின்றனர்.

அன்னையின் வாக்குபடி 72 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாகத் திருமுறைகள் ஓதப்பட வேண்டும். ஆனால், அந்தக் கால எல்லை முடிவடைந்தும் கதவு திறக்கப்படாமையால் இன்னமும் திருமுறை முற்றோதல் இடைநிறுத்தப்படாமல் தொடர்ந்து ஏழாவது நாளாக நடைபெறுகிறது.

(அ)

# இந்துக் குருபீடத்துக்கு கட்டடம் அமைக்க நிதி

யாழ்ப்பாணம்,ஜுன்13

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் குருபீடத்துக்கான கட்டடம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க எட்டு லட்சம் ரூபா நிதி உதவியை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்கியுள்ளது.

அண்மையில் சர்வதேச இந்து குருமார் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் போது குருபீடம் அமைக்க உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும் -

இதைத் தொடர்ந்து அமைச்சர் இந்த உதவியை முதல் கட்டடமாக வழங்கியுள்ளார் என்றும் -

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளர் க.நிஷாந்தன் தெரிவித்தார்.

(உ-3)

## திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு

# 3 பாடசாலைகள் இணைந்து நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள்

மாணவர்கள் மத்தியில் சமய அறிவை வளர்க்கும் வகையில் யாழ். நகரத்தை அண்டிய மூன்று பாடசாலைகள் ஒன்றிணைந்து முதன் முறையாக திருஞானசம்பந்தர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு சமய அறிவுப் போட்டி ஒன்றை நடத்தி பரிசில்களை வழங்கியுள்ளன.

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம், பூம்புகார் அ.த.க பாடசாலை, அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை என்பனவே ஒன்றிணைந்து இந்தப் போட்டியை நடத்தியுள்ளன.

ஆரம்பப்பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**ஆரம்ப பிரிவு**

முதலாமிடம்:-கே.டர்மிலன் (கந்தர் மடம் சைவப் பிரகாச வித்தி.)

இரண்டாமிடம்:-தே.சுவேதா (சைவப்பிரகாச வித்தி.)

மூன்றாமிடம்:- யோ.சரண்ராஜ் (கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தி.)

ப.அனுசியா (சைவப்பிரகாச வித்தி.)

ல.நிதர்சன் (பூம்புகார் அ.த.க. பாடசாலை)

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம்:-த.சியாமளா (பூம்புகார் அ.த.க.பாடசாலை)

இரண்டாமிடம்:- சி.யமிலா (பூம்புகார் அ.த.க.பாடசாலை)

மூன்றாமிடம்:- ஜெ.றஜித்தா (சைவப்பிரகாச வித்தி.)

சௌ.மேரிலாவண்யா (சைவப் பிரகாச வித்தி.)

**மத்திய பிரிவு**

முதலாமிடம்:- தே.சுரபி (கந்தர் மடம் சைவபிரகாச வித்தி.)

இரண்டாமிடம்:-இ.சசிகலா (அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை)

மூன்றாமிடம்:-ர.சிவலோஜினி (சைவப்பிரகாச வித்தி.)

**மேற்பிரிவு**

முதலாமிடம்:-அ.அரவிந்தன் (கந்தர்மடம் சைவபிரகாச வித்தி.)

இரண்டாமிடம்:- ம.சுபாஜினி (சைவப்பிரகாச வித்தி.)

மூன்றாமிடம்:- த.விஜிதரன் (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தி.)

பூ.லோஜினி (பூம்புகார் அ.த.க. பாடசாலை)

(க-7)

# அரியாலையில் மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்13

அரியாலைப் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மிதிவெடியில் சிக்கி தனது வலது கால் பகுதியை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

அரியாலையில் இருந்து இடம் பெயர்ந்து கோண்டாவில் பகுதியில் வசித்துவரும் குமாரசாமி துரைராசா (வயது 49) என்பவரே இவ்வாறு மிதிவெடியில் சிக்கியவராவார்.

இவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(உ-5-15-139)

# சடலம் அடக்கம் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜுன்13

கிளாலிக் கடற்பரப்பில் இருந்து மீட்கப்பட்டதாகத் தெரிவித்து கடந்த ஆறு நாள்களுக்கு முன் யாழ்போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட ஆணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினால் நேற்று அடக்கம் செயயப்பட்டது.

(உ-5-15-139)




யாழ்.றோட்டரிக் கழகம், யாழ்.மாவட்ட இன்ரறக்ட் கழகங்கள் இடையே நடத்திய வினாடி வினாப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றியீட்டியது.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெற்ற இதற்கான பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கிய உயர்தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் ரி.ராஜரட்ணம், அவரது துணைவியார், யாழ்.றோட்டரிக் கழகத் தலைவர் அ.பஞ்சலிங்கம் ஆகியோருடன் வெற்றியீட்டிய அணியினர் எடுத்துக்கொண்ட படம்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாமம் தெற்கு பிரதேசசபைத் தலைவராகப் பதவியேற்ற

**திரு.க.கமலசேகரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவரைப் பிரதேசசபைத் தலைவராக நியமித்ததையிட்டு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்விவகார அமைச்சர் மாண்புமிகு கௌரவ



**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் பிரதேச சபைத் தலைவரின் சேவைகள் மேலும் சிறப்புற, தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

முன்பள்ளி ஆசிரியர் சங்கம்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C-17077)



# ஓராண்டு நினைவுகளில்



**கந்தப்பு ஜெயராஜா** (வின்சன்)

(முன்னாள் பிரதேச சபை உறுப்பினர், கரவெட்டி)

விழிப்பு 28-04-1959 — அழிப்பு 25-05-2000

அன்பின் தோழனே
ஜெயராஜா!
பாசிசப் பேய்களின்
பாதகச் செயலினால்
காலனவன் உந்தனுயிரை
கணப்பொழுதினில் எடுத்தானே!
ஆண்டொன்று போனாலும்
ஆறாத புண்களிலே
அருவியெனக் குருதி வெள்ளம்
குமுறுதையா குவலயத்தில்!

உந்தன் பிரிவால் வாடும்
அன்புத் தோழர்கள்

(88994)

## சுமார் 800 பேர் உயிரிழக்கக் காரணமான

# மேற்குக்கரை மோதல் குறித்த முத்தரப்புப் பேச்சு முறிந்தது!

ஜெருஸலேம்,ஜூன்13

**மேற்குக் கரைப் பிரதேசத்தில் இஸ்ரேலியருக்கும் பலஸ்தீனருக்கும் இடையே கடந்த எட்டு மாத காலமாக இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக ஜெருஸலேமில் நடைபெற்ற பேச்சுவார்த்தை, உடன்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில் நேற்று முறிவடைந்தது.**

பலஸ்தீனம் மற்றும் இஸ்ரேல் ஆகியவற்றின் பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்ற மேற்படி பேச்சுவார்த்தை, அமெரிக்க அரசின் புலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏயின் இயக்குநர் ஜோர்ஜ் ரெனட் தலைமையில் நடைபெற்றது.

மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகளில், நீடித்த சண்டை நிறுத்தத்துக்கான அமெரிக்காவின் திட்டம் குறித்து இஸ்ரேலியர்களும், பலஸ்தீனர்களும் ஒப்புக்கொள்ளக் கூடிய உடன்பாடு ஒன்றை ஏற்படுத்துவது இப்பேச்சின் முக்கிய நோக்கமாக இருந்தது.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் ஒருவாரகால யுத்தநிறுத்தத்தை அறிவித்ததாலும் - இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் மோதலை முடிவுக்குக் கொண்டுவர ஆர்வம் காட்டியதாலும்-



இஸ்ரேலியரின் 'ஷெல்' தாக்குதலில் உயிரிழந்த 17 வயது பலஸ்தீன யுவதியின் சடலம்.

பேச்சு வெற்றிபெறும் என்று கருதப்பட்டது.

ஆனால் மேற்குக்கரை மோதல்களை முடிவுக்குக் கொண்டுவரும் உடன்பாடு எட்டப்படாமலேயே பேச்சுவார்த்தை முறிவடைந்துள்ளது.

இதற்கிடையில்,

கடந்த வாரம், பலஸ்தீனர்களின் கல்வீச்சில் இஸ்ரேலியக் குழந்தை ஒன்று உயிரிழந்ததையடுத்து, இஸ்ரேலிய ராணுவத்தினர் கடந்த சனிக்கிழமை நடத்திய 'ஷெல்' தாக்குதலில் 3 பலஸ்தீனப் பெண்கள் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து இதுவரை சுமார் 800 உயிர்களை பலிகொண்ட - 8 மாதகால - மேற்குக் கரை மோதல்கள் மறுபடி உச்சக் கட்டத்தை அடையும் என்று அஞ்சப்படுகிறது.

(ஒ)

## 6 தீவிரவாதிகள் காஷ்மீர் மசூதியில் சுட்டுக் கொலை!

ஸ்ரீநகர்,ஜூன்13

காஷ்மீரில் மசூதி ஒன்றினுள் மறைந்திருந்த 6 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அனந்தநாக் மாவட்டம் 'சங்பா' மசூதிக்குள் மறைந்திருந்த தீவிரவாதிகளே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

கடந்த 3 நாள்களாக மசூதியை முற்றுகையிட்டிருந்த இந்திய இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் இவர்களைச் சுட்டுக்கொன்றனர்.

அப்போது இடம்பெற்ற மோதலில் மசூதிக் கட்டடத்துக்கு சிறிது சேதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.(ஒ-4)

### காத்மண்டு நகரை விட்டு

## பிரேந்திராவின் ஆவியை வெளியேற்றும் சடங்கு

காத்மண்டு,ஜூன்13

மறைந்த நேபாள மன்னர் பிரேந்திராவின் ஆவியை காத்மண்டு நகரை விட்டு வெளியேற்றும் 11ஆம் நாள் சம்பிரதாயச் சடங்குகள் நேற்று முன்தினம் அனுசரிக்கப்பட்டன.

மன்னர் பிரேந்திரா உட்பட இறந்த அரச குடும்பதினரின் 11ஆம் நாள் சடங்குகள் பாஸ்மதி நதிக்கரையில் மத அனுஷ்டானங்களோடு நிறைவேற்றப்பட்டன.

சடங்குகள் முடிவடைந்ததும், மறைந்த மன்னர் பிரேந்திராவைப் போன்று அலங்கரிக்கப்பட்ட புரோகிதர் ஒருவர் யானை மீது ஏறி காத்மண்டு நகரை விட்டு வெளியேறினார்.

மன்னரின் ஆவியை நகரைவிட்டு வெளியேற்றுவதாகக் கருதப்படும் இந்தச் சடங்கில், நகரைவிட்டு யானையில் சென்ற புரோகிதர், அவரது வாழ்நாளில் ஒரு போதும் காத்மண்டு நகருக்குள் இனிமேல் நுழையக் கூடாது என்பது அந்நாட்டு சம்பிரதாயம் ஆகும். (ஒ-4)

## அல்பேனியக் கெரில்லாக்கள் மசிடோனியாவுக்கு எச்சரிக்கை

ஸ்கொப்ஜே,ஜூன்13

மசிடோனிய இராணுவம் தமது நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தாவிட்டால் தலைநகர் ஸ்கொப்ஜே மீது மோட்டார்த் தாக்குதல் நடத்தப்போவதாக அல்பேனியக் கெரில்லாக்கள் அறிவித்துள்ளனர்.

ஸ்கொப்ஜேயின் புறநகர்ப் பகுதியில் உள்ள சுமார் 800 கெரில்லாக்களுக்குத் தலைமை வகிக்கும் தளபதி ஹெரக்ஸா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஸ்கொப்ஜேக்கு வடக்கில் கெரில்லாககளின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்கள் மீது மசிடோனியப் படைகள் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும். இல்லையேல் ஸ்கொப்ஜே மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்படும் என்று ஹெரக்ஸா அறிவித்துள்ளார்.

இதற்காக பிரதமர் ஜோர்ஜிவ்ஸ்கிக்கு சிறிதுகாலம் அவகாசம் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அராசினோவோவை கெரில்லாக்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றிய பின்னர் ஸ்கொப்ஜேயைத் தமது தாக்குதல் வீச்சு எல்லைக்குள் அவர்கள் முதன்முறையாக கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## பிலிப்பைன்ஸில் பணயக்கைதியான அமெரிக்கரின் தலை துண்டிப்பு!

### 'அபுசாயப்' தீவிரவாதிகள் கொடூரம்!!

ஹொங்கொங்,ஜூன்13

பிலிப்பைன்ஸில் 'அபுசாயப்' தீவிரவாதிகள் தம்மால் தடுத்து வைக்கப்பட்டிருந்த பணயக்கைதிகளில் ஒருவரின் தலையைத் துண்டித்துக் கொன்று விட்டனர். பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த 3 அமெரிக்கர்களில் ஒருவரே நேற்றுமுன்தினம் இரவு சிரச்சேதம் செய்யப்பட்டவராவார்.

கலிபோர்னியாவைச் சேர்ந்த டலமோர் சொவைரேரோ என்பவரின் தலையை நேற்று முன்தினம் இரவு தீவிரவாதிகள் துண்டித்துக் கொன்றதாக ஹொங்கொங்குக்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. ஆனாலும் இந்தச் செய்திகள் அதிகாரபூர்வமாக உறுதிசெய்யப்படவில்லை.

பிலிப்பைன்ஸில் பிரிவினை கோரும் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பான 'அபுசாயப்' தீவிரவாதிகள், 3 அமெரிக்கர்கள் உட்பட 28 பேரைப் பணயக்கைதிகளாகத் தடுத்து வைத்திருந்தனர்.

மலேசிய முன்னாள் செனட்டர் சைதின் கார்லேஸாவை மத்தியஸ்தராகக் கொண்டு தம்மோடு அரசு பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்றும் -

இதற்குப் பிலிப்பைன்ஸ் அரசு சம்மதிக்காவிட்டால், தம்மிடம் உள்ள 3 அமெரிக்கர்களின் தலைகளைத் துண்டிக்கப்போவதாகவும் -

கடந்த வியாழக்கிழமை தீவிரவாதிகள் 72 மணிநேர அவகாசம் வழங்கியிருந்தனர்.

இநத அவகாசம் முடிவதற்கு சில மணித்தியாலங்கள் முன்னதாக, தீவிரவாதிகளின் கோரிக்கைக்கு பிலிப்பைன்ஸ் அரசு இணங்கியிருப்பதாகக கூறப்பட்டது.

இந்தச் சூழ்நிலையிலேயே அபுசாயப் தீவிரவாதிகள் தாம் தடுத்து வைத்திருந்த அமெரிக்கர் ஒருவரின் தலையைத் துண்டித்துள்ளனர்.

அமெரிக்கர் கொல்லப்பட்டதை அடுத்து, பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரேரோ, அமைச்சரவையின் அவசரக் கூட்டத்தைக் கூட்டி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆராய்ந்து வருகிறார்.

கடந்த வருடம் அபுசாயப் தீவிரவாதிகளிடம் பிடிபட்டிருந்த பணயக் கைதிகளை விடுவிக்க மில்லியன் டொலர் அளவில் பணம் கைமாறியிருந்தது குறிப்பிடத்தக்கது.(ஒ-4)

## தீவிரவாதிகளின் உறவினருக்கு ஆபத்து விளைவிக்கப்படும்

### பிலிப்பைன்ஸ் இராணுவம் எச்சரிக்கை

மணிலா,ஜூன்13

'அபுசாயப்' தீவிரவாதிகள், பணயக்கைதிகள் விவகாரத்தில் தொடர்ந்து கடும்போக்கைக் கடைப்பிடித்தால், தீவிரவாதிகளின் - பிலிப்பைன்ஸில் வாழும் - உறவினர்களுக்கு ஆபத்து விளைவிக்கப்படும் என்று பிலிப்பைன்ஸ் இராணுவம் எச்சரித்துள்ளது.

கடந்த ஒரு மாத காலமாகப் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக பிலிப்பைன்ஸ் அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே இழுபறி நிலை மற்றும் இராணுவ மோதல்கள் நிகழ்ந்திருந்தன.

ஆனாலும், பணயக்கைதிகளைக் கொல்லும் நடவடிக்கையை 'அபுசாயப்' தீவிரவாதிகள் மேற்கொள்ளவில்லை.

ஆனால் தற்போது, பணயக் கைதியான அமெரிக்கரின் தலையைத் தீவிரவாதிகள் துண்டித்திருப்பதால், இத்தகைய அறிவிப்பை வேறு வழியின்றி வெளியிட வேண்டியிருப்பதாகப் பிலிப்பைன்ஸ் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-4)

## புராதன கடிதத்தின் விலை 19 ஆயிரம் டொலர்கள்!

நியூயோர்க்,ஜூன்13

179 ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே பரிமாறப்பட்ட முதல் உத்தியோகபூர்வ கடிதம் பத்தொன்பதாயிரத்து நூற்றிஐம்பது டொலர்களுக்கு ஏலத்தில் விற்பனையாகியுள்ளது.

1822ஆம் ஆண்டு, சீனாவால் தடுத்து வைக்கப்பட்டிருந்த, அமெரிக்கக் கடற்படைக் கலம் ஒன்றை மீண்டும் அமெரிக்காவிடம் ஒப்படைக்கும்படி, அப்போது பதவியில் இருந்த 5ஆவது அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் மொன்றோ, சீனச் சக்கரவர்த்திக்கு எழுதிய கடிதமே தற்போது ஏலத்தில் விற்கப்பட்டது.

இந்தக் கடிதம் எதிர்பார்க்கப்பட்டதிலும் மிகக் கூடுதலான விலைக்கு விற்கப்பட்டுள்ளதாகவும் -

சமீபத்தில் நடுவானில் ஏற்பட்ட விபத்தையடுத்து சீனாவில் தரையிறக்கப்பட்ட தனது உளவு விமானத்தை மீள ஒப்படைக்க அமெரிக்கா கோரும் சம்பவமே விலையதிகமானதுக்குக் காரணம் என்றும்-

ஏல விற்பனையாளர்கள் தெரிவித்தனர். (ஒ-4)



ஜப்பானில் ஆரம்பப் பாடசாலையொன்றில் மனநோயாளி ஒருவரின் கத்திக்குத்துக்குப் பலியான 8 பாலகரின் இறுதிச் சடங்குகளின் போது, இறந்தவர்களின் சக தோழர்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழுவதைப் படத்தில் காணலாம். (இடது மேல் மூலைப் படம்: பாலகரைக் குத்திக்கொன்ற 37 வயது மனநோயாளியான மமோருடகுமா)

## இந்தியா உட்பட 5 நாடுகளில் 'எய்ட்ஸ்' நோய் பாதிப்பு அதிகம்

### ஐ.நா. அறிக்கையில் தெரிவிப்பு

நியூயோர்க்,ஜூன்13

'எயட்ஸ்' நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் 5 நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் சேர்ந்துள்ளது.

ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச் சபையில் 'எய்ட்ஸ்' தொடர்பான விசேட உச்சி மாநாடொன்று எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டே மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்தியா, எதியோப்பியா, கென்யா, நைஜீரியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய ஐந்து நாடுகள் 'எய்ட்ஸ்' நோயால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொட்ஸ்வானா, விசிடோ, சுவாசிலாந்து, சம்பியா, சிம்பாப்வே ஆகிய ஐந்து ஆபிரிக்க நாடுகளிலும் உள்ள சனத்தொகையின 20 சதவீதமானோருக்கு 'எய்ட்ஸ்' நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

தற்போது உலகெங்கிலுமுள்ள மக்களில் 3 கோடியே 60 இலட்சம் பேருக்கு 'எயட்ஸ்' நோய் தொற்றியுள்ளது.

100கோடி சனத்தொகையுடைய இந்தியாவில் கடந்த ஆண்டு 30 ஆயிரம் பேர் 'எயட்ஸ்' தாக்கி உயிரிழந்துள்ளனர்.

எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களில் அநேகர் இளம் வயதினராக இருப்பதால், இவர்கள் வாழும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

சுமார் 9 இலட்சம் ஆபிரிக்கக் குழந்தைகள், 'எய்ட்ஸ்' நோய்க்குப் பெற்றோரைப் பலி கொடுத்து, ஆதரவற்றவர்களாகி உள்ளனர்.

(ஒ)

# மாவைக் கந்தனின் உற்சவம் 26 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காம்யோற்சவமாகத் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை சண்முகப் பெருமானின் திருநடனத் திருவிழாவும், அடுத்த மாதம் 19 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடி அமாவாசைத் தினமான அன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

காம்யோற்சவ நிகழ்வுகள் அனைத்தும் தினமும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2.45 மணிவரை இடம்பெறும். தினமும் அபிஷேக ஆராதனைகளும், மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

உற்சவ நிகழ்வுகள் காலை 9 மணி முதல் பிற்பகல் 2.45 மணி வரை நடைபெறும் திருவிழாவுக்கு வரும் அடியார்களுக்கு அன்னதானம் மற்றும் தாகசாந்தி ஏற்பாடுகள் செய்வதற்கென குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரால்ஆலயத் திருவிழாக்களில்பக்தர்கள் கலந்துகொள்ள வசதியாக விசேட போக்குவரத்துச் சேவைகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-7)

# விட்டுக் கொடுப்புடன் பேச்சுக்களை நடத்துக!

## மன்னார் ஆயர் கோரிக்கை

லண்டன் ஜூன் 13

விட்டுக்கொடுப்புடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு விடுதலைப்புலிகளையும், அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்வதே எமது நோக்கம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் ஆயர் இராயப்பு யோசப்.

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம்ஒன்றைமேற்கொண்டு லண்டன் சென்றிருந்த ஆயர் அங்குள்ள செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆயர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அரசும், விடுதலைப்புலிகள் அமைப்பும் பேச்சுகளுக்குமுன் நிபந்தனைகளை விதித்து வருகின்றன. இதனால் பேச்சுத் தொடர்வது மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது.

எனவே இதனால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பாரிய நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் இரு தரப்பும் விட்டுக்கொடுப்புடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

யுத்தத்தினாலோ, வன்செயலினாலோ எதையும் சாதிக்க முடியாது என்ற பொதுவான உண்மையை நாம் உணர்ந்துள்ளோம்.

—என்றும் ஆயர் தெரிவித்துள்ளார். (உ-7)

# பருத்தித்துறை கடலில் கைதான எண்மரும் காங்கேசன் முகாமில்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 8 பேரும் தற்பொழுது காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பொலீஸாரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் கைதாவது குறித்து அவர்களின் உறவினர்கள் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள 8 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ விஸ்வலிங்கம் ரூபன் (வயது 26), சுப்பர்மடம், பருத்தித்துறை.

★ தேவராஜா தேவரஞ்சன் (வயது 23), பொலிகண்டி கிழக்கு.

★ சின்னப்பு தர்மலிங்கராசா (வயது 42), சுப்பர்மடம்.

★ தர்மராசா ரவிகரன் (வயது 24), சுப்பர்மடம்.

★ ராஜலிங்கம் ராஜ்குமார் (வயது 18), வியாபாரிமூலை, பருத்தித்துறை.

★ சேவியர் ஜெயசிறி (வயது 20), நாகர்கோயில் மேற்கு.

★ வைத்தீஸ்வரன் ஆனந்தீஸ்வரன் (வயது 23) சுப்பர்மடம்.

★ ஜெகதீஸ்வரன் ராஜ்குமார் (வயது 17) சுப்பர்மடம். (க-10)

# 23 பேருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுப் பல மாதங்களாக யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டவர்களில் 23 சந்தேக நபர்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்காத காரணத்தால் இவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார். (உ-5)

# நீதிமன்றம் கலையும் வரை தடுப்புக்காவல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நீதிமன்றத்தினை அவமதித்ததாகக் கூறப்படும்இருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்றம் கலையும் வரை காவலில் வைக்கப்பட்டனர்.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று வழக்குகள் நடந்து கொண்டிருந்த போது அங்கு வழக்கு விசாரணைகளுக்காக வந்திருந்த இருவர் மது போதையில் நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் நடந்து கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

இவர்களைக் கைது செய்த நீதிமன்றப் பொலீஸார் நீதிவான் முன்னிலையில் அவர்களை ஆஜர் செய்தனர்.

தமது குற்றத்தினை ஒப்புக் கொண்ட இருவரும் நீதிவானிடம் மன்னிப்பு கேட்டனர். மேற்படி இருவரையும் நீதிமன்றம் முடியும் வரை காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-5)

# சமய சந்நிதிகளில்

சுழிபுரம் பறாளாய் ஈசுவர விநாயகர் கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இந்த உற்சவத்தின் ரதோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாளான 27 ஆம் திகதி புதன்கிழமையும் இடம்பெறும். (க-173)

★ ★ ★

புலோலி பசுபதீஸ்வரர் கோயில் வருடாந்த சிவன் மஹோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தின் ரதோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாளான 27 ஆம் திகதி புதன்கிழமையும் இடம்பெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுறும். (க-173)

★ ★ ★

அம்பன் கந்தசுவாமி கோயிலில் கந்தபுராணப் படிப்பு பூர்த்தியை ஒட்டிய திருக்கல்யாண உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். மறுநாள் மாணிக்கத்தடாகத்தில் தீர்த்தோற்சவம் இடம்பெறும். (க-173)

★ ★ ★

காரைநகர் — கிழவன்காடு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் வியாழ மாற்றத்தை முன்னிட்டு இன்று காலை 7.00 மணி முதல் மஹாயாகம் நடைபெறவுள்ளது.

கணபதி ஹோமம், தட்சணாமூர்த்தி வழிபாடு என்பனவும் இடம்பெறும். (க-7)

★ ★ ★

தெல்லிப்பழை சித்தியம்புளியடி அருள்மிகு அண்ணமார் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகம், வளர்ந்துப் பானை எடுத்தல், பொங்கல், மடைப்பூசை என்பனவும் இடம்பெறும். (க-7)

★ ★ ★

மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலியும் திருச்சொரூப ஆராதனையும் இன்று காலை 7.00 மணிக்கு பங்குத்தந்தை அன்ரன் ஜோர்ஜ் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளன. (க-7)

★ ★ ★

உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 20ஆம் திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் 5ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (க-7)

# வணிகமாணி பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் அலகால் நடத்தப்படும் வணிகமாணி பகுதி III பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவை இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் வெளிவாரிப் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொள்ளுமாறும் உதவிப் பதிவாளர் தெரிவித்தார். (ம-6)

# வானொலி அறிவிப்பாளர் தெரிவு முடிவுகள் விரைவில் வெளியாகும்

## ஈ. பி. டி. பி. தரப்பில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு.மற்றும் வடக்கு — கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சினால் அண்மையில் வானொலி அறிவிப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் முடிவுகள் இந்த மாத முடிவுக்குள் வெளியிடப்படும் என ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கென கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் 5 தடவைகள் நேர்முகப்பரீட்சையை நடத்தி ஒரு தொகுதியினரின் பெயர் விவரங்களை கொழும்புக்கு எடுத்துச் சென்றுள்ளனர் என்றும் —

அந்தப் பெயர் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்படுவோர் விவரம் வெளியிடப்படும் என்றும் — அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-7)

# திருடர் குழுவின் தாக்குதலில் ஆசிரியையும் கணவரும் மயக்கம்

## உரும்பிராயில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

உரும்பிராய் வடக்கில் திருடர்களின் தாக்குதலுக்குள்ளான பாடசாலை ஆசிரியை ஒருவரும் அவரது கணவரும் மயக்கமடைந்த நிலையில் நேற்று அதிகாலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய ஆசிரியையான திருமதி ஜெகநாதராசா செல்வராணி (வயது 57), சின்னத்தம்பி ஜெகநாதராசா (வயது 63) ஆகியோரே இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

இருவரில் மனைவிக்கு மயக்கம் தெளிந்துள்ள போதிலும் கணவர் நேற்று மாலை வரையும் மயக்கமடைந்த நிலையிலேயே காணப்பட்டார்.

காயமடைந்தவரில் ஒருவரான திருமதி ஜெ. செல்வராணி இச்சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

திங்கள் இரவு ஒரு மணியளவில் நான் வீட்டிற்கு உள்ளேயும் கணவர் ஹோலிலும் உறங்கிக் கொண்டிருந்தோம். அப்பொழுது ஜன்னல் வழியாக உள்ளே டோச் வெளிச்சம் பாய்ச்சப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நான்கதவை திறந்துகொண்டு வெளியே வந்த போது கறுப்பு நிறமுடைய வெள்ளைச் சேர்ட் அணிந்த ஒருவர் நிற்பதைக் கண்டேன்.

திடீரென அவர்கள் என் தலையில் பொல்லால் தாக்கினார்கள். நான் கூக்குரலிட்டவாறு நிலத்தில் விழுந்து விட்டேன். அதற்கு பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது.

எமது வீட்டில் நானும் கணவரும் மட்டுமே வசித்து வந்தோம். காயமடைந்த நிலையில் மயக்கமடைந்திருந்த எங்கள் இருவரையும் அயலவர்கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து சேர்த்தனர்

எனது வீட்டில் நகைகள் உட்பட பெறுமதியான பொருள்கள் இருந்தன. அவை திருடப்பட்டிருக்கலாம் என்று நினைக்கின்றேன் — என்றும் கூறினார். (உ-5-154)

# கோஷ்டி மோதல் அறுவர் கைது

யாழ்ப்பாணம் ஜூன் 13

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவம் ஒன்று தொடர்பாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஆறுபேர் கோப்பாய் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த வல்லி நவரட்ணம், இவரது பிள்ளைகளான ந. கிருபா, ந. பிரேமசிலன், ந. நவசிலன் ஆகியோருடன் துரைசிங்கம் கமலதாஸ், எஸ்.ரஜனிகாந்த் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் நேற்று யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதிவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-5)

# நாடகக் களப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 13

தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நாடகக் களப் பயிற்சி நாளை வியாழக்கிழமை முதல் இரண்டு தினங்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குழந்தை சண்முகலிங்கமும் அவரது நாடகப் பயிற்சி மாணவர்களும் இந்தப் பயிற்சி வகுப்புக்களை நடத்துவர்.

நாடகப் பயிற்சிக்கு ஏற்ற உடையுடன் வருமாறு ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பயிற்சி வகுப்புக்கள் தினமும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். (உ-7)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி-வடக்கு ஜூன் 13

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் மாவட்ட ரீதியான தாச்சிசுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு பல்கலைக்கழக தாச்சி ஆடுகளத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் இணுவில் அறிஞர் விளையாட்டுக் கழகமும் கலைஒளி விளையாட்டுக்கழகமும் பங்கு பற்றுகின்றன. (உ-21)

★ ★ ★

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களிடையே பிரதேச சபையினால் நடத்தப்படும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ முடமாவடி ஞானவைரவர் சனசமூகநிலைய'ஏ' அணி எதிர் திருநெல்வேலி வாலையம்மன் சனசமூக நிலைய அணி.

★ நல்லூர் வடக்கு சனசமூக நிலைய அணி எதிர் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய 'ஏ' அணி.

★ கோண்டாவில் மக்கள் முன்னேற்றக்கழக 'ஏ' அணி எதிர் திருநெல்வேலி மகாத்மா சனசமூக நிலைய அணி. (உ-86)

## உதயன்

### "ஓப்பின் லைசென்ஸ்" உள்ளவரை...!

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, தமது அதிகாரிகள் மற்றும் கீழ்மட்டத்திலுள்ள படையினர் செய்யும் தவறுகளை ஒப்புக்கொண்டுள்ளார்; உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற படை அதிகாரிகளுக்கான மனித உரிமைகள் குறித்த கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில், இலங்கையின் ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்கள், போர்ப் பிரதேசங்களில் கடைப்பிடிக்க வேண்டிய சர்வதேச மனித உரிமைகள் பற்றித் தெரியாதவர்கள் என்று அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அதனால் அவர்கள் மனித உரிமைகளை மீறிப் பொதுமக்களையும் - சிவிலியன்களையும் - கொல்கிறார்கள் என்று கவலை தெரிவித்துள்ளனர்.

படையினர் மத்தியில் மனித உரிமைகள் பற்றிய அறியாமை நிலவுகின்றது என்று இலகுவாகக் கூறிவிடினும், அது மனித உயிர்களைப் அநியாயமாகப் பறிக்கும் பெரும் அட்டூழியமாகும் என்பதனை மறைக்க இயலாது.

ஈழப்போர் தொடங்கிய பின்னர் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கில் இலங்கையின் ஆயுதப் படைகளினால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளமை வரலாற்றுப் புள்ளி விவரம்.

தாம் எதிரி எனக் கருதும் விடுதலைப் புலிகள், தங்களைத் தாக்கும் போதும், போர்முனையில் தமது தரப்பில் அதிகமானோர் உயிரிழக்கும் போதும், தோல்வி அடையும் போதும் அவற்றுக்கெல்லாம் பழிவாங்கும் வகையில் ஏதும் அறியாத அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பது, ஆயுதப்படையினரின் ஒரு நடைமுறையாகிவிட்டது.

இவை யாவும் போர்ப் பிரதேச சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறிய கொடுமைகளே. ஆயினும் மிகச் சமீப காலம் வரை ஆயுததாரிகள் அல்லாத, போர் முனை எதிரிகள் அல்லாத, ஒன்றும் தெரியா அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைக் கொல்லும் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை; தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை. அதற்குப் பதிலாகக் குற்றத் தவிர்ப்புச் சட்ட வசதி செய்து கொடுத்து அவர்கள் பாதுகாக்கப்பட்டார்கள்.

அத்தகைய ஒரு பின்னணியில், படையினருக்குப் போர்ப் பிரதேச மனித உரிமைச் சட்டங்களைப் புகட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என எவரும் எதிர்பார்க்க முடியாது!

பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆயுதப்படையினருக்குத் தமிழ் மக்களை எதுவும் செய்யலாம் என்று 'ஓப்பின் லைசென்ஸ்' வழங்குகிறது. எந்தக் குற்றத்தையும் செய்துவிட்டு படையினர் தப்பிக்கொள்ள ஒரு பெரும் கேடயமாக - இரும்புப் போர்வையாக - அது விளங்குகிறது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு படையினரின் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை கொலை செய்வதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை - என்ற அம்சத்தையும் இராணுவத் தளபதி வெளியிட்டுள்ளார்.

தாம் கைது செய்த ஒருவரைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கும் வரை அவரைப் பாதுகாக்க வேண்டியது படையினரின் பொறுப்பாக இருந்த போதிலும், அதனைச் செய்வார் எவரும் இல்லை. அப்படி ஒரு கடமை தமக்கு இருப்பதாக படையினருக்குத் தெரியுமா என்பது சந்தேகமே!

காரணம இல்லாமல் - காரணம் கூறாமல் - தமிழ் இளைஞர், யுவதிகள் இப்போதும் கங்கு கரையின்றிக் கைது செய்யப்படுகிறார்கள்; காணாமற்போகச் செய்யப்படுகிறார்கள்; தடுப்பு முகாம்களில் சித்திரவதை செய்யப்படுகிறார்கள்.

போர்ப் பிரதேச மனித உரிமைகளை படையினர் மீறாதிருப்பின் இந்த அட்டூழியங்கள் நடைபெறுமா?

படையினரின் எல்லாத் தரப்பினருக்கும், மட்டத்தினருக்கும் போர்ப் பிரதேச மனித உரிமைகள் குறித்து புகட்டினாலும் கூட, அவர்கள் அவற்றை மேவிச் செயற்பட்டாலுங் கூட, 'ஓப்பின் லைசென்ஸ்' பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படாவிடில் எந்த நடவடிக்கையாலும் பயனில்லை.

# காணாமற்போனோர் 16 பேர் தொடர்பான விசாரணைகள்

## உறவினர்களுக்கு அவசர அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்13

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் 16 பேர் தொடர்பான விசாரணைகளுக்கு உறவினர்களை யாழ். பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைத்துள்ளனர்.

காணாமற்போனோரின் பெயர் விவரங்களும் முறைப்பாடு செய்தவர்களின் பெயர் விவரமும் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரமும் வருமாறு:-

★ கந்தவனம் சிவராசா(கோவை இல.பி-100) மட்டுவில் கிராமசேவகர் (இமையாணன், உடுப்பிட்டி)

★ சின்னத்தம்பி ஞானேந்திரன் (கோவை இல.பி-83 - எழுதுமட்டுவாழ்)

★ ஞானேந்திரன் சந்திரலேகா (கரணவாய், கரவெட்டி,)

★ கந்தையா புஷ்பராசா (கோவை இல.பி-97 - கோயிலாக்கண்டி, கைதடி) கிராமசேவகர்(ஜே-297)

★ இளையதம்பி திருஞானசந்திரன் (கோவை இல.-பி-39 - மந்துவில் கிழக்கு). இளையதம்பி ஆசையம்மா, மாலினி முரளிதரன் (மீசாலை மேற்கு)

★ கந்தசாமி புஸ்பலதா(கோவை இல.பி-14 - மந்துவில் மேற்கு) கதிரன் செல்லாச்சி, கதிரன் கந்தசாமி.

★ சின்னட்டி கோபாலகிருஷ்ணன்(கோவை இல. - பி-77) கைதடி, சங்கரன் சின்னட்டி, சுப்பையா பரமேஸ்வரன்(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

★ யோசப் கனீஸ்வரன்(கோவை இல.பி-24 - 93/3. டேவிட் வீதி, யாழ்ப்பாணம்) கிராமசேவகர்(ஜே-70)

★ இராஜரத்தினம் குணரத்தினம், இராஜரத்தினம் கேதீஸ்வரன் (கோவை இல. பி-133- நாகர்கோயில் கிழக்கு) குணரத்தினம் அகிலா தேவி, இராஜரத்தினம் கேதீஸ்வரனின் பெற்றோர்.

★ கதிரவேலு ஜெயந்தன் (கோவை இல.A-21(1) அரசடி, நவாலி) கதிரவேலு நகுலேஸ்வரி.

★ இராஜதுரை சுரேஸ்குமார் (கோவை இல. பி-76 - மைதான வீதி, கல்வியங்காடு) சிவமாலினி சுரேஸ்குமார், நாகையா ஜெயராஜினி.

★ யோன்பிள்ளை அன்ரன் (கோவை இல. ஏ-21(2) நாவற்குழி கைதடி, மேரி ஆன் கலிஸ்ரா, கோபாலசிங்கம் ஜீவபாலன்.

★ வல்லிபுரம் பாஸ்கரன் (கோவை இல. - பி-85, மறவன்புலோ கிழக்கு) கிராமசேவகர்(மறவன்புலோ கிழக்கு) பாஸ்கரனின் குடும்பத்தினர்.

★ கந்தவனம் அகதாஸ்(கோவை இல.-பி-72 சூசையப்பர் கோயிலடி, கோப்பாய் மத்தி) கந்தவனம் பரமேஸ்வரி.

★ பெர்ணாந்து ஜெயகாந்தன் (கோவை இல. பி - 130, இல.29, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்) ஆசீர்வாதம் பெர்ணாந்து.

★ சின்னத்தம்பி சிவகுமார் (கோவை இல.ஏ-13 - தச்சன்தோப்பு) சிவகுமார் விஜயா.

★ மைக்கல் பேர்னாட் ஜோன்சன் கோவை இல. ஏ-16 - இல 7/1, புதிய வீதி, கொய்யாத்தோட்டம்) ஜோன்சன் பாரதிஇ

மேற்படி விசாரணைகளுக்கு அழைக்கப்பட்டவர்கள் யாழ். பொலீஸ் நிலையத்திற்கு சமுகமளித்து விசாரணைகளை துரிதமாக முடிப்பதற்கு உதவி செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பொலீஸார் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

## நாட்டு நடப்பு

**'பகிடி வதை' - III**

அடித்திடல் அதட்டல் பின்பு
அடிபணிய வைத்தல்
இடுப்பினை வளைத்து நின்று
இளிச்சவாய்காட்ட வைத்தல்
படுத்திட வைத்தல் பின்பு
பானத்தைப் பருக்கி நிற்றல்
உடுத்ததை கழற்ற வைத்தல்
ஊ[illegible]கள் பலவும் செய்தல்
அடுக்குமோ தமிழர் பண்பு
ஆகுமோ தமிழர் நீதி?

*- விகடகவி -*

# இராஜகிரிய குண்டுவெடிப்புச் சம்பவம்: சந்தேகநபர்கள் இருவர் விடுதலை

கொழும்பு,ஜூன்13

இராஜகிரிய குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு செட்டியார்தெருவைச் சேர்ந்த சீனித்தம்பிராஜா என்பவரை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட உயர்நீதிமன்றம், விஜயலஷ்மி சிவ ஜெயராஜா என்ற பெண்ணை விடுதலை செய்யுமாறு கடந்த வாரம் உத்தரவு வழங்கியிருந்த போதும் இன்னும் அவர் தடுப்புக் காவலில் இருந்ததால் அவரையும் உடனடியாக விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் தம்மைக் கைது செய்ததும், தடுத்து வைத்திருப்பதும் சட்ட விரோதம் என்று தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை விசாரணை செய்த பின்பே மேற்படி விடுதலை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா நீதியரசர்கள் பி.எதிரிசூரிய, கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க ஆகியோர் நேற்று முன்தினம் இத்தீர்ப்பை அளித்தனர். (க-7)

## பருத்தித்துறைக்கு கடைசி பஸ் மாலை 6.30இற்கு

வடமராட்சி,ஜூன்13

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கான கடைசி நேர பஸ் புறப்படும் நேரம் அரை மணித்தியாலத்தால் நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாலை 6 மணிக்கு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து பருத்தித்துறைக்குக் கடைசி நேர பஸ் புறப்பட்டு வந்தது.

இம்மாதம் முதல் கடைசி நேர பஸ் மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குப் புறப்பட்டு வருகிறது. (க-173)

## டாக்டர்கள் முறைப்படுகிறார்கள்

# யாழ்.ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு இரவில் செல்ல நகரப் படை அதிகாரியின் அனுமதி தேவை!

## செஞ்சிலுவைக் கப்பலில் மட்டுமே மருந்து!!

யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்.போதனா வைத்தியசாலையிலுள்ள இரத்த வங்கி மற்றும் பிரேத அறைக்கு இரவு நேரத்தில் செல்ல வேண்டிய தேவை ஏற்படும் பட்சத்தில் நகரில் உள்ள படைத் தலைமையக உயர் அதிகாரியின் அனுமதியைப் பெற்றுச்செல்லவேண்டிய கஷ்டநிலை இங்கு நிலவுகிறது.

- இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பங்கு பற்றிய டாக்டர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இங்குள்ள நோயாளி ஒருவருக்கு இரவு நேரத்தில் இரத்தம் ஏற்றவேண்டிய நிலை ஏற்பட்டால் வைத்தியசாலை வளவிலுள்ள இரத்த வங்கிக்கு செல்வதற்கு பலாலியிலுள்ள படைத் தலைமையகத்தின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும்.

இதேபோன்று இரவு நேரத்தில் வைத்தியசாலைக்கு ஒரு சடலம் கொண்டுவரப்பட்டலோ அல்லது வார்ட்டில் ஒருவர் இறந்து விட்டாலோ இரவு நேரத்தில் பிரேத அறைக்குக் கொண்டு செல்ல முடியாது.

அவ்வாறு கொண்டு செல்வதற்கும் படையினரின் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டால் குறிப்பிட்ட சடலங்களை வெளிநோயாளர் பிரிவிலோ அல்லது வார்ட்டுகளிலோ வைக்கப்பட்டு காலையில்தான் பிரேத அறைக்குக் கொண்டு செல்ல முடியும்.

### அருகில் தலைமையகம்

பிரேத அறை மற்றும் இரத்த வங்கி அமைந்துள்ள இடங்களுக்கு அருகில் 512ஆவது பிரிகேட் அலுவலகம் இருப்பதனாலேயே இந்த நிலைமை.

வைத்தியசாலைகளுக்குத் தேவையான, அவசியமான மருந்துகளைக்கூட விமானத்தில் கொண்டு வர முடியாதுள்ளது.

'கெற்றமின்' என்னும் மயக்க மருந்து கடந்த பத்து வருடங்களாக இந்த வைத்தியசாலைக்கு அனுப்பப்படவில்லை. போர் வேளையில் பயன்படுத்தப்படும் மயக்க மருந்து என்பதைக் காரணம் காட்டி இம் மருந்தை இங்கு கொண்டு வருவதற்கு அனுமதியில்லை.

ஒட்சிசன் சிலிண்டர், முறிவுகளுக்கு போடப்படும் சுண்ணாம்புப் பற்று (P.O.P.) போன்றவை பல வேளைகளில் இங்கு உரிய நேரத்துக்குக் கிடைப்பதில்லை.

ஒட்சிசன் சிலிண்டர் இல்லாமையினால் சில வேளைகளில் இங்கு நோயாளிகள் இறக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

### செஞ்சிலுவைக் கப்பலில் மட்டுமே மருந்து

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் மட்டுமே யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருந்துகளை எடுத்து வர முடியும். 'சிற்றி ஓவ் றிங்கோ' கப்பல் உட்பட ஏனைய வர்த்தகக் கப்பல்களில் மருந்துகளை எடுத்து வர முடியாது.

செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் ஒரு தடவை வராதுவிட்டால், முக்கிய மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

### வெளிநாட்டு உபகரணங்கள் திசை மாற்றம்

எமது வைத்தியசாலைக்கு வெளிநாடுகளில் இருந்து கொழும்புக்கு அனுப்பப்படும் மருத்துவ உபகரணங்கள் தென்பகுதியிலுள்ள மருததுவமனைகளுக்கு மாற்றம் செய்யப்படுகின்றன.

உதாரணமாக எமக்கு அனுப்பப்பட்ட சிறுநீரகத்திலுள்ள கற்களை அழிக்கும் இரண்டு இயந்திரங்கள் இவ்வாறு திசை மாற்றப்பட்டன.

1998ஆம் ஆண்டு சுகாதார அமைச்சு வெளியிட்ட நூல் ஒன்றில் யாழ்.போதனா வைத்தியசாலையின் நிலை பற்றியும் அதன் அபிவிருத்தி பற்றியும் குறிப்பிட்டு விட்டு அதற்குக் குறைந்தளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் ஒன்றை தரம் உயர்த்துவதற்குத் திட்டமிடப்பட்டது.

இத்திட்டத்தின் படி பொலன்நறுவ ஆஸ்பத்திரியிலே தரம் உயர்த்தப்பட்டது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (க-5)

## நாளை


வைகாசி 31
வியாழக்கிழமை
திதி: அட்டமி
முன்னிரவு 7.38 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பிற்பகல் 1.12 வரை.
சுபநேரம் : 7.23 - 8.53
ராகுகாலம் : 1.23 - 2.53
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

தாயின் உள்ளத்தை அறிபவன் கடவுளின் கருணையை அறிபவன் ஆகிறான்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

நிழல் தரும் அந்தப் பெருவிருட்சம் இளைப்பாறுவதற்கு நல்ல இடம்தான். ஆனால் எமது முன்னோர்கள் பாடுபட்டு வளர்த்த அது நிற்கும் இடமோ....
பழைய காவலரணுக்கு அருகில்.....! அதனடியில் என்னென்ன வெடிப்பொருள்கள் இருக்குமோ...? அதனை நாடிச் செல்லாதிருப்பதே புத்திசாலித்தனம்.





# பாஷையூர் புனித அ
# 151 ஆவது வரு

## யாழ்.ஆயரின் செய்தி



எம்மில் விதைக்கப்படும் நற்செய்தியின் வித்து கடுகு மணிபோல் சிறிய விதை பெரிய மரமாக வளர்ச்சியுறும் என்ற நற்செய்தியின் வார்த்தைக்கு ஒப்ப 151ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பாசையூர் புனித அந்தோனியார் பங்கு மக்களுக்கு இது விசுவாச வளர்ச்சியின் அடையாள மாகும். சென்ற வருட இடப்பெயர்வும், பாரிய தொழில் இழப்புக்களும், இன்னும் பல பாரிய தாக்கங்களுக்கு முகம்கொடுத்தாலும் எமது உறுதியான விசுவாசமும் தளராத நம்பிக்கையும் இவ்வருடம் ஒன்று கூடவும் ஒன்றாய் செபிக்கவும் அழிவுற்றதை மீண்டும் கட்டியெழுப்பவும் இறைவன் அருள் பாலித்துள்ளதை உணர்வோம். எமது பாதுகாவலரான புனித அந்தோனியார் இறையேசுவின் பாதையில் வழி நடத்தவும் எமது அனைத்து தேவைகளிலும் பகிர்ந்து பேசுவராக. இறைத் திட்டத்தில் வழிநடக்க செபத்தில் ஒன்றித்து எனது வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவிக்கின்றேன்.

*இறைபணியில் இணையும் ஆயர்,*
**பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம்,**
*யாழ்.ஆயர்.*

## ஆலய பங்குச் சபையினரின் அழைப்பு

**கோடி** அற்புதரென்றும் சக்தி வாய்ந்த புனிதரென்றும் புதுமை நாயகம் என்றும் போற்றிப் புகழ்பாடும் புனித அந்தோனியாரின் பெருவிழா இன்று யாழ். பாஷையூரில் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

மூர்க்கத்தனமான யுத்தக் கொடுமையால் மாபெரும் சிதைவுக்கு உட்படுத்தப்பட்ட ஆலயத்தினுள்ளே கம்பீரமாக எழுந்து நின்று காட்சி தரும் சக்தி வாய்ந்த புனிதரின் சொரூபத்தின் மாபெரும் திருவிழா.

கோடானுகோடி மக்கள் சாதி சமய வேறுபாடுகளை மறந்து ஒன்றாகக் கூடி நின்று புனிதரின் அருட் கொடைகளை ஏராளமாக பெற்றுக்கொள்ளும் பெருவிழா. நூற்றி ஐம்பத்தொரு ஆண்டுகள் பழமைவாய்ந்த ஆலயச் சிறப்புக் கொண்டாட பரம்பரைக் கிறிஸ்தவர்களை ஆண்டு நடத்தித் தன் அருட் கொடைகளை நிறைவாகப் பொழிந்து வரும் புனிதரின் பெருவிழா.

சக்தி வாய்ந்த புனிதரின் பெருவிழாவுக்கு வருகைதந்து புனிதரின் ஆசிகளை நிறைவாக மனநிறைவுடன் பெற்றுச்செல்லுமாறு பக்தர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

**- ஆலய பங்குச் சபையினர்.**

## சமாதான சக வாழ்வு நிலவுக!



**யாழ்.** குடாநாட்டில் பல பாகங்களிலும் புனித அந்தோனியார் ஆலயங்கள் இருப்பினும் பாஷையூரில் அமைந்திருக்கும் புனித அந்தோனியார் ஆலயம் புகழ்பெற்ற, தனித்துவமான ஒரு திருத்தலமாகும். இதற்குக் காரணம் இத்திருத் தலத்தை நோக்கி வரும் பக்தர்களுக்கு இறைஅருளை அள்ளி வழங்கும் கோடி அற்புதர் புனித அந்தோனியாரின் அற்புதங்களே.

இப்புகழ்பூத்த ஆலயம் தன்னுடைய 151ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் இவ்வேளையில் ஆசிச்செய்தி கூறுவதில் மனமகிழ்ச்சி அடைகிறேன். இத் தினத்தில் அனைவரும் புனித அந்தோனியாரின் அருட்கொடைகளை நிறைவுடன் பெற்றுக்கொள்ள ஆசிக்கின்றேன்.

புனிதரைத் தமது தேவைக்காக மட்டும் நாடிச் செல்லாது அவர் எவ்வாறு இறைவனை நோக்கிச் சென்றார் என்பதைக் கருத்தில் கொண்டு இறைவனின் சித்தத்துக்கும், புனிதரின் போதனைக்கும் ஏற்ப எமது வாழ்க்கையையும் மாற்றிக் கொள்ள வேண்டும்.

நமது உள்ளங்களிலும், இல்லங்களிலும், இன்னும் சிறப்பாக நாட்டிலும் நாம் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் நீதியில் கட்டப்பட்ட சமாதானம், சகவாழ்வு நிலவ புனித அந்தோனியார் வழியாக இறைவனை வேண்டி ஆசி கூறி நிற்கின்றேன்.

"நாவழியாவரம் பெற்ற புனித அந்தோனியார்
எம் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக"

**அருட்திரு கி.ஜோ.ஜெயக்குமார்.**

## கடற்றொழிலாளர்களிடமிருந்து....

**வட** பகுதியிலேயே மிகப் பிரசித்தி பெற்றதும் பழைமை வாய்ந்ததும், கோடி மக்கள் ஒன்று சேருகின்ற புனித ஸ்தலமுமாக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம் திகழுகின்றது. நூற்றைம்பது ஆண்டுகள் பூர்த்தியெய்திய இவ்வாலயம் அதன் விசுவாச வாழ்விலும் இறையன்பிலும் முதிர்ச்சி அடைந்துள்ளமை இறைவன் செய்த அளப்பரிய நன்மைத்தனமாகும். எனவே இவ்வருடம் நூற்றைம்பத்தோராவது ஆண்டை பங்குத் தந்தை அருட்திரு. சாள்ஸ் கொலின்சுடைய ஆன்மீக வழிகாட்டலிலே நினைவுகூருகின்ற வேளையிலே, இங்கு வரும் கோடி பக்தர்களிற்கும் எமது புனிதரின் பரிந்துரையும், பராமரிப்பும், அருளும், என்றும் நிறைவாக கிடைத்திட வாழ்த்தி நிற்கின்றோம்.

'கோடியற்புதர் எங்கள் காவலரே
கொண்டாடுவோம், கொண்டாடுவோம்'

**புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கம்,**
*பாஷையூர்.*

## நீண்ட வரலாற்றுப் பி
## பாஷையூர் புனித அந்தே

**யாழ்.**பாஷையூர்ப் பகுதியில் கோயில் கொண்டு அண்டி வரும் பக்தர்களுக்கு அருள் மழை பொழிந்து, உள்ளத்திற்கு அமைதி அளித்து கோடி அற்புதங்கள் பல புரியும் பதுவைப் புனிதர் அந்தோனியார் பெயரில் அமைக்கப்பட்ட ஆலயம் - யாழ். மறை மாவட்டத்தில் உள்ள முதுபெரும் ஆலயங்களில் ஒன்றாகும். இவ்வாலயத்தைச் சேர்ந்த மக்களின் விசுவாச வாழ்வின் ஆரம்பம் எத்தனையாம் ஆண்டுக்குரியது என்பது பற்றி உறுதியாகக் குறிப்பிட்டுக் கூற முடியாதுள்ளது. போர்த்துக்கேயர் காலத்தில இலங்கையில் கத்தோலிக்கத்தின் பரம்பல் பற்றிக் குறிப்பிடும் பல ஆவணங்கள் காணப்படுகின்ற போதும் அவற்றில் பாஷையூர்ப் பகுதியில் கிறிஸ்தவ குழுமம் வாழ்ந்ததற் கான சான்றுகள் இல்லை. எனினும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் பிற்கூற்றில் பாஷையூர்ப் பகுதியில் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆவணச் சான்றுகள் உண்டு. பாஷையூரில் அமைந்திருந்த ஒரு சிறு ஆலயம் பற்றிய குறிப்புக்கள் யாழ்.ஆயர் இல்லத்தில் உள்ள 1775ஆம் ஆண்டு அறிக்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அருட் திரு.பௌவுடன்ஸ் கூறுகின்றார்.

1825ஆம் ஆண்டு அறிக்கையில், இலங்கையில் அமைந்திருந்த எல்லாக் கத்தோலிக்க ஆலயங்களின் பெயரும், அவற்றின் அமைவிடமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது. மேலும் 1843 - 1944ஆம் ஆண்டுகளுக்கான கத்தோலிக்க பாடசாலைகள் பற்றிய அறிக்கையின் படி பாஷையூரில் இயங்கிய சிறிய பாடசாலையில் திரு.அந்தோனி என்னும் ஓர் ஆசிரியரிடம் 30 மாணவர்கள் பாடம் கற்றிருக்கின்றார்கள்.

தற்போதைய ஆலய வரலாற்றை நோக்கும் போது, 1844 - 1845ஆம் ஆண்டுகளில் கோவாஒரற்ரோறியன் சபையைச் சார்ந்த அருட்திரு. யோக்கிம் கபிரியேல் என்னும் குரவரின் ஊக்குவிப்பாலும், மக்கள் அளித்த ஆதரவினாலும் கல்லினால் ஓர் ஆலயம அமைக்கப்பட்டது. 1850இல் (*Casinelli*) கசினிலி அடிகள், இவ்வாலயம விசாலமானதாயும், அழகானதாயும் அமைக்கப்பட்டிருந்ததுடன், இரண்டு குருமார் இங்கு தங்கிப் பணியாற்றுவதற்கு ஏற்ற வசதிகளைக் கொண்ட குருமனையும் கட்டப்பட்டிருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

1851ஆம் ஆண்டு வரையும் யாழ். பேராலயமும், அதை அண்மித்த ஆலயங்களும் ஒரு நிர்வாகப் பிரிவாகவே இருந்து வந்துள்ளன. 1851ஆம் ஆண்டு ஆயர் பெற்றாக்கினி இப் பகுதியின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு யாழ்.நிர்வாகப் பிரிவை மூன்று பகுதிகளாகப் பிரித்தார். அவை முறையே ஆசனக் கோயில், யாகப்பர் ஆலயம், புதுமை மாதா ஆலயம் ஒரு பிரிவாகவும், யாழ் அடைக்கல அன்னை ஆலயம், நாவாந்துறை, நவாலி என்பன மற்றொரு பிரிவாகவும், திருமுழுக்கு யோவான் ஆலயம், பாஷையூர் அந்தோனியார் ஆலயம், வழி மீசாம் என்பன மூன்றாம் பிரிவாகவும் வகுக்கப்பட்டிருந்தன. எனினும் இப்பிரிவு நிர்வாகம் அதிக காலம் பேணப்படவில்லை. செமேரியா அடிகளின் வலியுறுத்தலின் பேரில் இப்பகுதிகள் மீண்டும் ஒரு நிர்வாகப் பிரிவாக மாற்றப்பட்டன. 1951ஆம் ஆண்டிலேயே இப்பங்கு தனி நிர்வாகப் பிரிவாக மாற்றப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டமை இப்பங்கு யாழ். மறைமாவட்டத்தில் நன்கு வளர்ச்சி பெற்ற நிலையில் இருந்திருக்கின்றது எனக்கொள்ள இடமுண்டு. மேலும் ஆயர் யூலன் யாழ்.மறை மாவட்டத்தை நிர்வகித்த காலத்தில் மறைமாவட்டம் பல்பரிமாண நிலையில் வளர்ச்சி பெற்றதாக நல்லூர்ச் சுவாமி ஞானப்பிரகாசர் பல இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் பாஷையூரில் ஏற்கனவே இருந்த புனித அந்தோனியார் ஆலயத்தை மேலும் விசாலப்படுத்தி, அதிக எண்ணிக்கையிலான மக்கள் வழிபாட்டில் கலந்து கொள்வதற்கு ஏற்றதாக மாற்றி அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் 1906 இல் ஆலய வேலைகள் ஆரம்பித்தபோது ஏற்கனவே இருந்த ஆலயத்தின் அத்திவாரம் முற்றாக மாற்றியமைக்கவேண்டும் என்பது உணரப்பட்டது. இந்நிலையில் பாரிய அளவில் புதிய அத்திவாரம் இடப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டது. மக்கள் ஆரம்ப முதல் அதிக ஆர்வத்துடன் ஆலய அமைப்புப் பணியில் கலந்துகொண்டு தங்கள் பங்களிப்பைச் செய்தனர். இவ்வாலயத்தின் கட்டட நிபுணர்களாக அருட்திரு. கௌயுட்டியர் (*Gautier*), அருட்திரு. டெஸ்லன்ஸ் (*Deslands*) என்பவர்கள் செயற்பட்டு மேற்பார்வை செய்தார்கள். இவர்களில் அருட்திரு. *Deslands* அடிகள் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்கள் என்பது இங்கு கோடிட்டுக் குறிப்பிடப்படவேண்டும். அருட்திரு. டெஸ்லன்ஸ் அடிகள் தமது திட்டங்களைச் செயறபடுத்த மக்கள் மத்தியிலிருந்து தோன்றிய சிக்கல்களுக்கு முகம்கொடுத்து இவ்வாலய அமைப்புப் பணியை மேற்கொள்ள வேண்டியிருந்தது என சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார்.

### கோவா ஆலய அமைப்பு

மககள் தங்கள் ஆலயம் கோவா ஆலய அமைப்பு முறையை ஒத்ததாக, அதாவது இருமருங்கிலும் பாலை மரங்களினாலான தூண்கள் அமைக்கப்பட்டு, அவற்றிலேயே முகட்டுப்பாரம் தங்குவதற்கு அமைப்புச் செய்யப்படவேண்டும் என வற்புறுத்தினர். மேலும் இதற்கு வேண்டிய பாலைமரங்களைப் பெருங்காடுகளுக்குச் சென்று தாமே வெட்டிவந்தனர். ஆனால் டெஸ்லன்ஸ் அடிகள் ஆலய அமைப்பிற்கு நவீன முறையிலான தூண்கள் அற்ற முறையில் அமைக்கும் மாற்றுத்திட்டத்தைக் கொண்டிருந்தார். டெஸ்லன்ஸ் அடிகள், இரண்டு பக்கச்சுவர்களையும் பலமானதாகவும், நன்கு உயரமானதாகவும் கட்டியெழுப்பிய பின்பு பெரிதும் சிரமப்பட்டு மக்களைத் தமது திட்டத்திற்கு இணங்க வைத்தார். மக்கள் காட்டிலிருந்து வெட்டி வந்த பெரும் பாலை மரங்களைக் கொண்டு 38 அடி அகலமான ஆலய முகட்டுக் கூரைத்தாங்கணைப்புக்களைச் (*Trusses*) செய்து, அவையே முகட்டுப்பாரங்களைத் தாங்கும் அமைப்பாக அக்காலத்தில் புதியதோர் முறையில் கூரை வேலையை அமைத்திருந்தார்.

இவ்வாறான பலமான முகட்டு அமைப்புப் பணிகள் கொழும்பு (*Walkers and sons*) என்பவர்களினால் அன்றைய பண மதிப்பீட்டின் படி 6000/= ரூபா செலவில் அமைக்கப்பட்டது. 106 அடி நீளமும், 38 அடி அகலமும் கொண்ட ஆலய நிர்மாணப்பணியானது 20,000 ரூபா செலவில் (முகட்டு வேலை தவிர்ந்து) 13.10.1911 இல் நிறைவு பெற்றது.

இவ்வாலயம் இருபக்கங்களிலும் அகண்ட விறாந்தைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. விறாந்தைகளில் காணப்படும் அதிக எண்ணிக்கையிலான உரோமையக் கட்டடக் கலையமைப்பைக் கொண்ட வளைவுகள், ஆலயத்தின் உட்பகுதியில் பீடத்தையும், ஆலயத்தின் நடுப் பகுதியையும் இணைக்கும் பாரிய வளைவு, ஆலயத்தின் இரண்டு மேற்பகுதிச் சுவர்களிலும் காணப்படும் பல சிறிய வளைவுகளைக் கொண்ட பலவர்ண யன்னல்கள் ஆலயத்தின் அழகிற்கும், கட்டட அமைப்பிற்கும் மெருகூட்டுகின்றன.



மேலும் அருட்திரு.*Deslands* அடிகள் ஆலயத்திற்கு அருகில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் நான்கு பக்கங்களுக்கும் விசாலமான விறாந்தைகளைக் கொண்ட, போதிய காற்றோட்டமுள்ள இரண்டு பெரிய அறைகளைக் கொண்ட வசதியுள்ள குருமனையை 8000 ரூபா செலவில் 1816இல் நிர்மாணித்தார். 1918ஆம் ஆண்டு ஆலய வளவினுள் ஆலயத்திற்கு மிக அண்மித்த நிலையில் 75 அடி நீளமும், 20அடி அகலமும் கொண்ட ஒரு பாடசாலை 3000 ரூபா செலவில் அமைக்கப்பட்டது. இவ்வாறு அருட்திரு.டெஸ்லன்ஸ் அடிகள் பாஷையூர்ப் பங்கில் பல கட்டடங்களை நிர்மாணித்ததோடு, மக்களின் வாழ்விலும் பல முற்போக்கான மாற்றங்களை ஏற்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றியுள்ளார்.

1898இல் பாஷையூர்ப் பங்கு சுண்டிக்குழி திருமுழுக்கு யோவான் ஆலயத்திலிருந்த அருட்திரு.அந்தோனி அவர்களால் சில மாதங்கள் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. மேலும் தொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயம் மிக நீ இணைக்கப்பட்டதாகவே இருந்துள்ளது. 1898ஆம் ஆண்டு வரை அநாதைகள் மடத்தை நிர்வகித்த குருமாரினாலேயே கண்காணிக்கப் பாஷையூர் தனிப்பங்காகப் பிரிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்து

தொடர்ந்து இவ்வாலய நிர்மாணத்திலும், பங்கு வளர்ச்சியிலும் பிடுதல் பொருத்தமானது. 1918இல் பங்குத்தந்தையாகக் கடமை டெஸ்லன்ஸ் அடிகளின் சகோதரர்) பெல்லியம் நாட்டிலிருந்து அ பாதைப் படங்களைத் தருவித்தார். 1928 முதல் 1932 வரையும் இரண்

### ஆலயத்தின் வரலாறு - ஒரு பார்வை

பணியாற்றிய ஏற்ற அழ அமைப்பித்து ஏற்ற சூழலை

அருட்தந்தை டெஸ்லன்ஸ் அவர்கள் இரு தடவைகள் பாஷையூ கள் பணியாற்றி 04.02.1932இல் இயற்கை எய்தினார். பெரும் எண் ணீர் மல்கப் பங்கு கொண்ட அடிகளாரின் மரணச்சடங்கு பாஷை இவ்வாலயத்தினுள்ளேயே 05.02.1932 மாலை வழிபாட்டுடன் அடக்க

1935-1939 காலப்பகுதியில் அருட் தந்தை போல் பஸ்ரியன் பங் பல முற்போக்கான பணிகள் இடம்பெற்றுள்ளன. பாடசாலை விஸ் சிங்காசனம், ஆலயத்துக்கு மின்சாரம் வழங்கியமை, கம்பீரமான காலத்தில் இடம்பெற்றன. 1940ஆம் ஆண்டு அருட்தந்தை அ பணியாற்றிய காலத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் தலைமையில் அருட் என்பவர்களின் துணையுடன் இப்பங்கில் மகா ஞானஒடுக்கம் நடத் பணியாற்றிய லெபோண் அடிகள் மறைக்கல்வி வகுப்பு, ஞாயிறு மக்களை ஞான வாழ்வில் முன்னேற்றினார். 1960இல் பங்குத்தந்தை அடிகளும் மக்கள் ஆன்மீக முன்னேற்றத்துக்கு முக்கியத்துவம் களையாற்றியுள்ளார்.

1965இல் பணியேற்ற சந்தியாப்பிள்ளை அடிகள் வருடாவருடம் சிறப்புடன் வழிபாடுகள் நடத்துவதற்கு ஏதுவாக அழகான, அமைப் ணத்துக்கு முன்னின்றுழைத்தார். இப்பணி 06.04.1968இல் நிறைவ கம்பீரமான முகப்புத்தோற்றம், அழகான உரோமையக் கட்டடக்கலை ஆலயத்தின் தோற்றம் என்றும் காண்போர் உள்ளத்தைக் கவரும் கட்

1965ஆம் ஆண்டிலிருந்து பங்கை நிர்வகித்த குருக்கள் சுதேசிக குருக்களாகவும் காணப்படுகின்றனர். இதற்கு முன்பு இங்கு பணியா னோர் அமலமரித்தியாகிகள் சபையைச் சார்ந்தோராவர். இவர்களில் ஆலய அமைப்பில் மாற்றங்கள் பெரிய அளவில் இடம்பெறவி முன்னேற்றத்தில் சுதேச குருக்கள் பெரும் பங்களிப்புச் செய்துள்ள

இவ்வாலயம் இப்பங்கு மக்களின் வாழ்வில் புதுப்பித்தல் ஏற்பட ஆன்மீகத்தில் முன்னேறவும், மக்களை ஒன்றிணைக்கும் திருத்தலமாக வி


**சிவராதா புடைவை அகம்**
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

**TWINNKLE STAR**
CHITS AND FINANCE
173, COLOMBOGAM ROAD, JAFFNA.

**சாருணி யுவல் கட்டிங்**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

**றியோ கிறீம் ஹவுஸ்**
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

**குமார் பேக்கரி**
செபஸ்ரியான் வீதி,
பாஷையூர்.

**Associated Cons**
Govt. Approved Con
Suppliers and Tran
*2/1, Maruthady Road, Nal*
T.Phone: 245
**A.J.R. கட்டட ஒப்**

# அந்தோனியார் ஆலயத்தின்
# வருட விழாச் சிறப்பிதழ்

## ...ப் பின்னணி கொண்ட ... அந்தோனியார் ஆலயம்



...ல மாதா ஆலயம் மிக நீண்ட காலமாகப் பாஷையூர்ப் பங்குடன் ...1898ஆம் ஆண்டு வரையும் இவ்வாலயங்கள் கொழும்புத்துறை ...லேயே கண்காணிக்கப்பட்டுள்ளன. 1898ஆம் ஆண்டிலிருந்து ...ர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

... பங்கு வளர்ச்சியிலும் முக்கிய சில விடயங்களை இங்கு குறிப் ...த்தந்தையாகக் கடமையாற்றிய வணபவுநில் அடிகள் (வண. ...ஜியம் நாட்டிலிருந்து அழகான, பெரிய அளவிலான சிலுவைப் ...தல் 1932 வரையும் இரண்டாம் முறையாகப் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய டெஸ்லன்ஸ் அடிகள் ஆலயத்துக்கு ஏற்ற அழகான, வசதியான மூலஸ்தானத்தை அமைப்பித்து பக்தியாக வழிபாட்டிற் பங்குகொள்ள ஏற்ற சூழலை ஏற்படுத்தியிருந்தார்.

...ரு தடவைகள் பாஷையூர் பங்கின் பங்குத்தந்தையாக 16 ஆண்டு ...ற்றினார். பெரும் எண்ணிக்கையிலான பாஷையூர் மக்கள் கண் ... மரணச்சடங்கு பாஷையூர் ஆலயத்தில் இடம்பெற்று, பூதவுடல் ... வழிபாட்டுடன் அடக்கம் செய்யப்பட்டது.

...தை போல் பஸ்ரியன் பங்குக் குருவாகப் பணியாற்றிய காலத்தில் ...ன. பாடசாலை விஸ்தரிப்பு, கோதிக்கலை வடிவில் அமைத்த ...ங்கியமை, கம்பீரமான அழகான முகப்பு அமைப்பும் இவர் ...ண்டு அருட்தந்தை அல்பிரட் குக்ரின் பங்குத் தந்தையாகப் ...ர் தலைமையில் அருட்தந்தையர்கள் வேத நாயகம், ஞானசைநாதர் ... ஞானவொடுக்கம் நடத்தப்பட்டது. 1955இல் பங்குத் தந்தையாகப் ... கல்வி வகுப்பு, ஞாயிறுக் கடமைகள், விசுவாச வாழ்வு என ... 1960இல் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்ற வண. வசம் பேக் ...த்துக்கு முக்கியத்துவம் அழித்து அளப்பெரிய பல சேவை

...அடிகள் வருடாவருடம் ஆலய முன்றிலில் திருவிழாக்காலங்களில் ...ளாக அழகான, அமைப்பான போட்டிக்கோ மண்டபத்தின் நிர்மா... 06.04.1968இல் நிறைவுபெற்றது. அமைப்பான போட்டிக்கோ, ...ரோமையக் கட்டடக்கலை அமைப்பு வளைவுகளைக் கொண்ட ...உள்ளத்தைக் கவரும் கட்டடக்கலையாகவே தோற்றமளிக்கின்றது. ...கித்த குருக்கள் சுதேசிகளாகவும், அதிகமானோர் மறைமாவட்டக் ...கு முன்பு இங்கு பணியாற்றி யோரில் பெரும் எண்ணிக்கையிலா ...ந்தோராவர். இவர்களில் சிலர் ஐரோப்பியர். 1965களுக்குப் பின்பு ... அளவில் இடம்பெறவில்லை. எனினும் மக்களின் ஆன்மீக ... பங்களிப்புச் செய்துள்ளனர்.

...வில் புதுப்பித்தல் ஏற்படவும், விசுவாச வாழ்வில் உறுதிபெற்று ...ணைக்கும் திருத்தலமாக விளங்கியது, தொடர்ந்து விளங்குகின்றது.

இவ்வாலயத்தைச் சேர்ந்த மக்களின் பெரும் பகுதியினர் கடற்றொழிலையே பாரம்பரியமாக மேற்கொண்டு வந்தாலும், கடந்த 50 ஆண்டுகளில் தமது அயராத கடின உழைப்பினாலும், தியாகத்தினாலும் தம்மக்களுக்கு சிறந்த கல்வி வளத்தை அளித்து வைத்தியர்கள், ஆசிரியர்கள், அரசசார் நிறுவனங்களின் ஊழியர்கள் என பல்துறைகளிலும் முன்னேறியுள்ளனர்.

இறை விசுவாசத்தில் நன்கு வளர்ச்சி பெற்ற ஒரு சமூகமாகவே இப்பங்கு வளர்ந்து வருகின்றது. இப்பங்கு உருவாக்கிய ஆற்றல்மிக்க பல குருமார், சேவை உளம் கொண்ட பல கன்னியர்கள், இன்னும் பங்கில் உயிர்த்துடிப்புடன் செயற்படும் பக்திச்சபைகள், மன்றங்கள் மக்களின் ஆழமான விசுவாச வாழ்விற்கும் இறைப்பற்றிற்கும் சிறந்த சான்றாகும்.

இம்மக்களின் ஆற்றல்கள், திறமைகள் சமய வாழ்வில் மட்டுமன்றிச் சமூக வாழ்விலும் பிரதிபலிக்கின்றன. யாழ்.மறைமாவட்டத்திலேயே சிறந்த உதைப்பந்தாட்டக் குழுக்களில் ஒன்றாக விளங்கியதும், தொடர்ந்து விளங்கி வருவதும் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகமாகும். சிறந்த கலைஞர்களை உருவாக்கிய பெருமையும் இப்பங்கைச் சாரும். பல நாட்டுக்கூத்து ஆசிரியர்கள், அண்ணாவிமார்கள், நவீன நாடக நடிகர்கள், நெறியாள்கை செய்வோர் என பல கலைஞர்கள் இப்பங்கிலிருந்து உருவாகியிருக்கின்றார்கள். பல நாடகங்களை மேடையேற்றியமை, பல பரிசில்கள் வென்றமையும் இவர்களின் கலைத் திறமைக்குச் சிறந்த சான்றாகும்.

### பாதிக்கப்பட்ட மக்கள் குழுமம்

இவ்வாறாக அமைதியாக, மகிழ்ச்சியாக வாழ்ந்த கிறிஸ்தவ குழுமத்தின் வாழ்வு, கடந்த 20 வருடங்களாக இடம்பெற்று வருகின்ற இனப் போரினால் எல்லாத் தமிழ் மக்கள் வாழ்வும் பாதிக்கப்பட்டது போன்று, இவர்கள் வாழ்வும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கரையோரத்தில் வாழும் மக்கள், கடல் வளத்தில் தங்கி வாழும் மக்கள் பலரைக் கொண்ட பங்கு என்னும் நிலையில் அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் குழுமம் எனவும் குறிப்பிடலாம்.

இரு பக்கங்களிலும் கோபுரங்களைக் கொண்ட கம்பீரமான முகப்புத் தோற்றம், அமைப்பான போட்டிக்கோ, அழகான வழிபாட்டுப் பகுதி, உரோமையக் கட்டிடக் கலையைக் கொண்டு பூரண நிர்மாணம் பெற்ற இவ்வாலயம் 1995ஆம் ஆண்டிலிருந்து பல வகையிலும் பாதிப்பிற்குட்பட்ட ஆலயமாகக் காணப்படுகின்றது. 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வின் போது இப்பங்கு மக்களும் முற்றாக ஒரு பகுதியினர் தென்மராட்சிக்கும், மற்றோர் தொகுதியினர் வன்னிப் பகுதிக்கும் இடம்பெயர்ந்தனர். 1995ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இடம்பெற்ற பாரிய இராணுவ நடவடிக்கையினால் இவ்வாலயம் வார்த்தைகளால் விவரிக்கமுடியாத அளவிற்கு பெரும் சேதத்திற்கும், அழிவிற்கும் உட்பட்டது. ஆலயத்தின் கூரை முற்றாகச் சேதமடைந்தது. ஆலயத்திற்கு ஏற்பட்ட முழுச்சேத விவரமும் ரூபா 75 இலட்சம் என மதிப்பிடப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் 1996ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் தங்கள் இல்லங்களுக்குத் திரும்பினார்கள். இடம் பெயர்விற்கு முன்பு பங்கில் வாழ்ந்த மக்கள் தொகையுடன் இடம்பெயர்வின் பின் திரும்பிய மக்கள் தொகையை ஒப்புநோக்கும் போது மீண்டும் பங்கிற்கு வந்தோர் மிக குறைவானவர்களே. 1985ஆம் ஆண்டில் இப்பங்கில் வாழ்ந்த மக்கள் தொகை 762 குடும்பங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1999ஆம் ஆண்டுக் கணக்கின் படி 387 குடும்பங்களும், 2001ஆம் கணக்கின்படி 308 குடும்பங்களும் இப்பங்கில் வாழ்கின்றார்கள். இது ஒரு அண்ணளவான கணக்காயிருப்பினும், மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சியைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது.

**அருட்திரு. ஞா. பிலேந்திரன்,**
**கிறிஸ்தவ நாகரிகத்துறை,**
**யாழ் - பல்கலைக்கழகம்.**

1996இல் தங்கள் இருப்பிடம் திரும்பிய மக்கள் தங்கள் ஆலயத்திற்கும், இல்லங்களுக்கும் ஏற்பட்ட அழிவுகளையும், சேதங்களையும் கண்டு கலங்கினாலும், நம்பிக்கை இழக்க வில்லை. மக்கள் இடிபாடுகளை அகற்றி, ஆலயத்தை சிரமதானம் மூலம் துப்புரவு செய்து கூரையற்ற நிலையிலும் ஆலயத்தில் வழிபாடுகள் நடைபெற தங்கள் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கினார்கள். இத்தனை அழிவுகள், குண்டு வீச்சுக்கள், ஷெல் அடிகள் மத்தியிலும் புனித அந்தோனியார் திருச்சுரபமோ அது வைக்கப்பட்ட கூடோ எந்தவித சேதமின்றியும் காக்கப்பட்டமை, மக்களுக்கு புனித அந்தோனியார் மீதுள்ள பக்தியை மேலும் ஆழப்படுத்தியது.

சேதத்திற்குட்பட்ட ஆலயத்தின் புனரமைப்பின் முக்கிய பணிகள் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமானது. குறைந்த அளவிலான குடும்பங்களே இக்காலப்பகுதியில் பங்கில் வாழ்ந்தாலும் மக்கள் வாரத்தில் ஒரு நாள் தங்கள் கடல்வள உழைப்பை முழுமையாக ஆலயத்தின் புனருத்தாரணச் செலவாக மனம உவந்து வழங்கினார்கள், ஏனைய நிறுவனங்களில் பணியாற்றும் இப்பங்கு மக்களும், வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்வோரும் தங்கள் ஆலயப் புனரமைப்பிற்கு தாராள மனப்போக்குடன் தங்கள் பங்களிப்பைச் செய்தனர். 1996ஆம் ஆண்டு யாழ்.மறைமாவட்டத்தைத் தரிசித்த திருத்தந்தையரின் பிரதிநிதி இப்பங்கிற்கு வருகை தந்தமை பல துன்பங்களுக்குட்பட்ட நிலையிலிருந்த மக்களுக்குப் பெரும் ஊக்குவிப்பாக அமைந்தது.

கடந்த சில வருடங்களாக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் கடல் பாதுகாப்பு தடைச்சட்டம் கடல்வளத்தில் தங்கி வாழும் மக்களுக்கு பெரும் பாதிப்பாகவே உள்ளது. அன்றாட வாழ்வின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட முடியாத நிலையில் பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றனர். எனினும் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் இங்குள்ள பிள்ளைகளின் கல்விக்கு தம்மால் இயன்ற பண உதவி வழங்குகின்றமை இவர்களின் கிறிஸ்தவ மதிப்பீட்டு வாழ்விற்குச் சிறந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## பங்குத் தந்தையின் ஆசிச் செய்தி



"ஆண்டவர்க்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில், அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு"
*(தி.பா.107:1)*

**வ**ரலாற்றுப் பெருமை மிக்க பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு இன்று 151 வயது. ஒன்றரை நூற்றாண்டைக் கடந்து நடைபயில்வது மனதிற்கு இன்பம் தருகின்றது. கருவறை முதல் கல்லறை வரைதான் நிச்சயிக்கப்பட்டுள்ள எங்கள் வாழ்வு இறை விசுவாசத்தால் ஆழம் பெறுவதோடு அர்த்தம் நிறைந்ததாகின்றது. இந்த இறை விசுவாச வாழ்வில் எங்கள் மையமாகவும் இறைமக்களை ஒன்றிணைக்கும் இடமாகவும் பங்கு ஆலயம் திகழ்கின்றது.

இறைவார்த்தையைப் பகிரவும், நற்கருணையை வாழ்வாக்கவும் தினமும் ஆலயத்தில் ஒன்று சேர்கிறோம். எமது வாழ்வு முழுவதையும் இறைவனின் திட்டப்படி வாழ அருட்சாதனை வாழ்வின் மையமாக ஆலயம் இருக்கின்றது. இறை திட்டத்தில் நாம் அநுபவித்துக் கொண்ட விசுவாசக் கொடையை வரலாற்றுப் பெருமையுடன் நினைவு கூரும் நேரம் இது. தனது வாழ்வு முழுவதையும் இறைவனின் இனிய திட்டத்திற்காக அர்ப் பணித்துத் தனது வாழ்விலே இறை இயேசுவை முழுமையாக அனுபவித்தவர் புனித அந்தோனியார். வேதனைப் படுவோருடனும், ஏழைகளுடனும், அநாதைகள், ஆதரவற்றவர்களுடனும் தனது வாழ்வைக் கரைத்து அவர்களின் இனிய வளர்ச்சிக்காகத் தன்னைக் கொடுத்து அவர்களின் வாழ்வை வளப்படுத்தியவர் புனித அந்தோனியார்.

கால நீரோட்டத்திலே எழுந்த பல புயல்கள் இவ்வாலயத்தையும், பாஷையூர் வாழ் மக்களையும் சூழ்ந்து வேதனைகளையும் சோதனைகளையும் ஆங்காங்கே பல நீர்ச்சிதறல்களையும் தோற்றுவித்தது. சோர்ந்து போய் மக்கள் பயந்து ஓடித் திரிந்தனர். இடம்பெயர்வுகளும், அழிவுகளும், இழப்புக்களும் மக்களை கலங்கடித்தன. வீடு வாசல்கள், பொருள் பண்டங்கள், சொத்துக்கள், தொழில்கள் அனைத்தையும் இழந்தனர். இருப்பினும் விசுவாசத்தை அவர்கள் இழக்கவில்லை. இப்பங்கில் உள்ள கத்தோலிக்க மக்கள் பலப்பல தலைமுறைகளாக கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்றுத் தாழ்வுகள் மத்தியிலும் பேணி வந்த சமூகம் என்பது யாவரும் அறிந்த உண்மை. நிறைவாக இன்றைய இனிய நன்னாளிலே இப்பங்கின் என் அன்பார்ந்த மக்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இறைவனின் நிறைவான ஆசீர் வாதங்கள் என்றும் இருக்க வேண்டுகின்றேன்.

"தேரில் வலம் வருவார் அந்தோனி
தரிசனம் தந்திடுவார்
கோடி நலம் பொழிவார் – எங்கள்
குறையெல்லாம் தீர்த்திடுவார்"

*கிறிஸ்துவில் உங்களுடன் இணையும்*
**Rev. Fr.CHARLES COLLINS**
*பங்குத்தந்தை.*

## குரு முதல்வரின் செய்தி



**151**ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பாஷையூர் புனித அந்தோனியார் பங்கு மக்களுக்கு, இவ்வருடவிழா அனைவருக்கும் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கிறது. சென்ற வருட இடம்பெயர்வும், தொழில் இழப்புகளும் பல விதமான பாரிய தாக்கங்கள் விளைந்திருந்தாலும் இவர்களின் பாதுகாவலரான புனித அந்தோனியாரின் வேண்டுதலால் மீண்டும் திரும்பி வரவும், புனிதரின் விழாவைச் சிறப்பாக கொண்டாடவும் இறைவன் கருணை கூர்ந்துள்ளார். இறை ஆசி இவர்களுக்கும் பங்குத்தந்தை அவர்களுக்கும் வேண்டி திருநாள் வாழ்த்துக்களை கூறிநிற்கிறேன்.

**அருட்திரு. J.P.E.செல்வராஜா,**
*குரு முதல்வர்.*

## யாழ். மறைக்கோட்ட முதல்வரின் ஆசி

**யாழ்.** மண்ணின் பழம்பெரும் புகழ்வாய்ந்த புனித அந்தோனியார் ஆலயத்தின் 151ஆவது ஆண்டு விழாவை ஒட்டி ஆசிச் செய்தி வழங்குவதில் நான் பேருவகை அடைகின்றேன். யாழ்.மாந்தரின் இதயக் கோயில்களில் நீங்காத நினைவலைகளாக, கோடியற்புதரான புனித அந்தோனியாரின் திருத்தலம் காட்சியளிக்கின்றது. மக்களின் விசுவாச வாழ்விற்கு கலங்கரைத் தீபமாகவும், நம்பிக்கையின் விடிவெள்ளியாகவும் மலர்ந்து, பல்லாயிரக்கணக்கான பக்தர்களை கவர்ந்துகொண்ட அற்புதம் நிறைந்த இவ்வாலயம், அன்றிலிருந்து இன்றுவரை எமது குடாப் பகுதியில் பெயரோடும், புகழோடும் சிறந்து விளங்கிய மிகவும் உன்னதமான பணித் தளமாக பல இறைபணியாளர்கள் கால் பதித்த களமாக, ஆன்மீக விடிவை வழங்கும் தளமாக திகழ்வதை நினைத்து நானும் மகிழ்கின்றேன். போரின் கெடுபிடிக்குள் இவ்வாலயம் சிதைந்தாலும் எம் மண்ணில் நீங்காத புகழ்பெற்ற தலமாக இவ்வாலயம் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது. இருள் சூழ்ந்த, அபயக்குரல் நிறைந்த, மனிதத்தின் மாண்பு சிதைந்து போன எம் மண்ணின் மைந்தர்களுக்கு அபயம் அளிக்கும் உன்னத கோயிலாக, இதர விசுவாசிகளை கவர்ந்திழுக்கின்ற ஞானக் களஞ்சியமாக மாறி எதிர்காலச் சந்ததியின் உண்மை விசுவாச ஒளியில் பெற்றெடுக்க வேண்டுமென ஆசிக்கின்றேன்.

இந்த 151ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாட முனைப்போடும், கடின உழைப்போடும் செயற்படும் அருட்தந்தை அவர்களையும், பங்கு மக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் நல்லாசிகளையும் கூறி நிற்கின்றேன்.

**அருட்தந்தை. அ. கொ. கிறிஸ்ரோப்பர்.**


...d Construction
...proved Contractors,
...s and Transporters
...ady Road, Nallur, Jaffna.
Phone: 2452
...ட ஒப்பந்தகாரர்

லிங்கன் கிறீம் ஹவுஸ்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

லொயலாஸ்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
(C/88943)


லைடன் புடைவை நிலையம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பொபி ஸ்ருடியோ
கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி.

பாலகிருஷ்ணன் நகை மாளிகை
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

# வாழ்த்துகின்றோம்

**யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடம்பெற்று மாகாணப் போட்டியில் கலந்துகொள்வதற்காக திருகோணமலை செல்லும்**



17 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்டக் குழுவினரையும்



19 வயதிற்குட்பட்ட வலைப்பந்தாட்டக் குழுவினரையும்

*இரண்டாம் இடம்பெற்ற 17 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்டக் குழுவினரையும் பாராட்டுவதுடன் மாகாண மட்டத்திலும் வெற்றிபெற வாழ்த்துவதுடன் அதற்காக அயராது உழைத்த அதிபரையும் ஆசிரியர்களையும் பயிற்றுநர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பழைய மாணவர் சங்கம்,
யூனியன் கல்லூரி,
*தெல்லிப்பழை.*

(88986)

## இறுதி வருட குழுப் புகைப்படம் எடுத்தல

கலைப்பீடம்

*காலம்:* இன்று (2001.06.13) புதன்கிழமை
*நேரம்:* பிற்பகல் 4.00 மணி (புதிய நேரம்)
*இடம்:* கலைப்பீட முன்றில்

அனைத்து இறுதிவருட கலைப்பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

- பிரதிநிதி,
இறுதிவருடம், கலைப்பீடம்,
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(88987)

## உரிமை கோரப்படாத பசு மாடு

எமது நிலைய அதிகார பிரதேசத்தில் கட்டாக்காலியாகப் பிடிக்கப்பட்ட பசுமாடு ஒன்று உரிமை கோரப்படாமல் உள்ளது. மாட்டுக்கான உரிமையாளர் மூன்று நாள்களுக்குள் தகுந்த ஆதாரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
கமநல கேந்திர நிலையம்,
நல்லூர்.

(88988)

வயாவிளான் ம.ம.வியின்

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 25 - 10 - 1985



உதிர்வு 10 - 06 - 2001

எமது 10ஆம் தர மாணவன்

**செல்வன் ஸ்ரீநிதி கபிலன்**

அகால மரணமடைந்தமையால் நாம் ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்து, பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- பாடசாலைச் சமூகம்,
வயாவிளான் ம.ம.வி.

*உரும்பிராய்.* (88984)

## சபாநாயகர் மறுக்கிறார்

கொழும்பு,ஜூன்13

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையைத் தடுக்கும் விதத்தில் தன்மீது ஜனாதிபதி செல்வாக்கைப் பிரயோகிக்கவில்லை என்று சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க மறுத்துள்ளதாக ஏ.எப்.பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

"நான் இது விடயமாக எக்கட்டத்திலும் அவருடன் கலந்தாலோசிக்கவில்லை" என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, "பிரதம நீதியரசருக்கெதிராக எதிர்க்கட்சியினரால் கையளிக்கப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணையை நான் ஏற்றுக்கொள்வேன்" என்று சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(க)

## நெடுந்தீவில் முறைசாராப் பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம், ஜூன்13

தீவகக் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரின் அனுசரணையுடன் நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் கணனி மற்றும் கைப்பணிப் பயிற்சி நெறிகளும் -

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் மின்னிணைப்புப் பயிற்சி நெறியும் - ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இந்தப் பயிற்சி வகுப்புக்களில் கலந்துகொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ம-7)

## புலமைப்பரிசில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஜூன்13

பளை மத்திய கல்லூரி மூலம் 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் கொடுப்பனவைப் பெறும் மாணவர்களை புலோலி தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சமுகமளித்துத் தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் கே.குணபாலசிங்கம் கேட்டுள்ளார்.

(ம-7)

## கந்தபுராண படன பூர்த்தி விழா

யாழ்ப்பாணம்,ஜூன்13

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்று வந்த கந்தபுராண படனத்தின் பூர்த்தி விழா நேற்றுக் காலை 9 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியை செல்வி சபாபதி தங்கப்பொன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் புராண படனம் நடத்திய பௌராணிக வித்தகர் மு.ஆறுமுகம் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். அடியார்களுக்கு அன்ன தானமும் வழங்கப்பட்டது.

(ம-7)

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்13

புனித ஜோண்.பொஸ்கோ வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஜூலை மாதம் 5ஆம் திகதி காலை 10 மணிக்கு அதிபர் அருட்செல்வி ஜி.செல்வராணி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(க-10)

## 20 குடும்பங்களுக்கு மலசலகூடங்கள்

வலிகாமம்தெற்கு,ஜூன்13

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறு பிள்ளைகளைக் கொண்டுள்ள இருபது குடும்பங்களுக்கு மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன.

'யுனிசெவ்' ஸ்தாபனம் இம் மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்க உள்ளது. ஒவ்வொரு மலசல கூடத்துக்கும் சுமார் 15ஆயிரம் ரூபா வீதம் மூன்று இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

மலசலகூடங்கள் அவசியமான குடும்பங்கள் கிராம சேவையாளர்கள் மூலம் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(க-152)

## பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய சிறப்பிதழ் தொடர்ச்சி

## நீண்ட வரலாற்றுப் பின்னணி....

சான்றாகும். இப்பங்கின் மக்கள் இடம்பெயர்ந்து வன்னியிலும், புலம்பெயர்ந்து கனடா, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளிலும் வாழ்கின்றனர். மேலும் 2000ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இடம்பெற்ற இடப்பெயர்வு இப்பங்கு மக்களுக்கு மீண்டும் பெரும் பாதிப்பையும், இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது. 2000 ஆம் ஆண்டில் இப்பங்கில் புனித அந்தோனியார் திருவிழா கொண்டாடப்படாமை இப்பங்கில் வரலாற்றில் துயருடன் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடையமாகும். 2001 ஆம் ஆண்டு ஆலயத்தைச் சூழ்ந்த, மிக அண்மித்த பகுதியில் இராணுவத்தினர் முகாமிட்டிருக்கின்ற நிலையிலேயே திருவிழா கொண்டாடப்படுகின்றமை குறிப்பில் இடம்பெற வேண்டியதே.

எத்தனை துன்பங்கள், இழப்புக்கள் துயரங்கள் மத்தியிலும் புனித அந்தோனியாரின் பரிந்து பேசுதல், அவர் வழியாக இறைவனின் பாதுகாப்பு, வழிநடத்தல் தமக்கு உண்டு என்பது இப்பங்கு மக்களின் தளராத, உறுதியான நம்பிக்கை. இதே நம்பிக்கை இவர்களை என்றும் கவர்ந்து வழிநடத்தும்.☆

# IN MEMORIAM

**92 nd BIRTHDAY 13-06-2001**



**LATE V.M.CUMARASWAMY**
**Retd.District Judge, Mallakam**

**10-05-2001 அன்று இறைவனடி சேர்ந்த எனது தந்தை**

**வி.மா.குமாரசுவாமி**

*(இளைப்பாறிய நீதிபதி - மல்லாகம்)*

**அவர்களது 92ஆவது பிறந்த தினம் ஆகிய இன்று அவர்களை நினைந்து பிரார்த்திக்கின்றோம்.**

குவலயத்தில் நாளும் இறைபாதம் பணிந்தே மாறாத சேவை மனசாட்சி வழிநின்று, நீதிநெறி வழுவாது அயராதுழைத்து அன்புடன் உற்றவர் மற்றவரை அணைத்து வாழ்ந்தது போதுமென்றோ குலக்கொழுந்தாய் வந்தெங்கள் குறைதீர்க்கவென்றோ நூறுகாண முன் விரைந்தே பறந்தீர் பரமனிடம் ஆறுதல் பெறுக, ஆத்மசாந்தி பெறுக அரனிடம்!

*"லிங்க நிலையம்"* கு.விசுவலிங்கம் குடும்பம் (மகன்)
*கே.கே.எஸ்.றோட்,* திருமதி வி.மா.குமாரசுவாமி
*மல்லாகம்* (88980) உற்றார், உறவினர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை தர்மலிங்கம் (சந்திரன்)

இருபாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை தர்மலிங்கம் (சந்திரன்) 03.06.2001 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை மற்றும் விசாலாட்சி தாமோதரம்பிள்ளையின் அன்பு மருமகனும், இராசலக்ஸ்மியின் அன்புக் கணவரும், கெங்காதரன், கெங்காதேவி, கெங்கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாக்கியம், காலஞ்சென்ற உலகநாதன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2001) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.கெங்காதரன்
(சகோதரன்)

*இராஜ வீதி,*
*கோப்பாய்.* (88976)

## திருமதி ஆதிசிவம் இராசம்மா

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆதிசிவம் இராசம்மா 10.06.2001 அன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ஆதிசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் சுசிலாதேவி, விஜயகுமாரன் (திருமலை), காருணியதேவி, சற்குணதேவி, விமலாதேவி (அருணா - கனடா), இராசகுமாரன் (மானிப்பாய் ப.நோ.கூ.ச.), பத்மாதேவி (ஜேர்மனி), சந்திரகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவமணி, காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் சிவரூபி, அம்பலவாணர் (மின்சாரசபை, நுணாவில்), கமலநாதன், யோகேந்திரகுமார் (கனடா), ஜெயரூபி **(B.A.)**, தங்கராஜா (ஜேர்மனி), ஆனந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2001) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாகியப்பிட்டி,*
*சண்டிலிப்பாய்.* (88985)

தகவல்:
குடும்பத்தினர்.

# தொண்டமனாறு கலையரசி சனசமூக நிலையத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 13

தொண்டமனாறு கலையரசி சனசமூக நிலையத்தின் ஆண்டு விழாவும், புனரமைப்பின் பின்னரான திறப்பு விழாவும் கடந்த சனியன்று நிலையத் தலைவர் ப.தயாளதாசன் தலைமையில் நடைபெற்றன.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில் ''சமுதாய விழிப்புணர்வு, மக்கள் மத்தியிலான தூய்மையான நேயம், ஒன்றுபட்ட பரந்த சிந்தனை என்பன பேணப்பட்டால் ஒரு சமுதாயம் மேம்பாடு காண்பது திண்ணம்'' என்று தெரிவித்தார்.

''கலாசார மாற்றத்தினால் தமிழ்ச் சமுதாயம் சிறப்படைந்துள்ளதா? சீரழிந்துள்ளதா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெற்றது. பத்திரிகையாளரும், கலைஞருமான வி. ஆர். ஸ்ரீநடராஜா இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.

கெருடாவில் கிராமசேவகர் ஆர். இராசேந்திரம், பனை அபிவிருத்திச்சபை விரிவாக்க உத்தியோகத்தர் ஜீ. தங்கவேலு, உதவித்திட்டப் பணிப்பாளர் நா. மகேந்திரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யோ. பரமேஸ்வரி, வே. பரமானந்தம் ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (க-7)

# செய்தியாளர் யுத்தப் பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி தேவை

## ஜனாதிபதியிடம் அவசர கோரிக்கை

ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கியமையை வரவேற்கும் அதேவேளை, பத்திரிகையாளர் பாதுகாப்புக்குழு செய்தியாளர்கள் யுத்தப் பிரதேசங்களுக்கு நேரில் சென்று செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தணிக்கைக்கட்டுப்பாட்டை நீக்கியதை நாம் வரவேற்கிறோம். நீண்டகாலமாக நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் தொடர்பாகச் செய்திகள், வெளியிடுவதிலுள்ள ஏனைய தடைகளையும் அகற்றுவீர்கள் என்று நம்புகிறோம். கடந்த மூன்றாண்டுகளாக நடைமுறையில் இருந்த பல்வேறு தணிக்கைகளுக்கு மேலதிகமாய், யுத்தப் பிரதேசங்களுக்கு செய்தியாளர் செல்லும் அனுமதியை அரசு வழங்காததால் சண்டைகள் பற்றிய செய்திகள் பெருமளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டன. உத்தியோகபூர்வமான அனுமதி கோரிய செய்தியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை என்று பத்திரிகையாளர் பாதுகாப்புக்குழு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது. (க)

## செயலமர்வு

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான ஆரம்பக் கல்வி நாடகக் களப் பயிற்சி செயலமர்வுகள் நாளை வியாழக்கிழமையும், மறுநாள் வெள்ளிக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார், (க-117)

# யாழ். மாணவர்கள் 208 பேர் நாளை திருமலை புறப்படுகின்றனர்

## மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, கலாசார. பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படவுள்ள மாகாண மட்ட விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள யாழ். மாவட்ட மாணவர்கள் குழு நாளை வியாழக்கிழமை கப்பலில் திருகோணமலைக்குச் செல்லவுள்ளது,

எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள பெரு விளையாட்டுக்களில் (குழுப்போட்டிகள்) பங்குபற்றவுள்ள 208மாணவ, மாணவிகளும் பொறுப்பான ஆசிரியர்களுமே நாளைய தினம் செல்லவுள்ளனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகி 23 ஆம் திகதி வரையும் நடைபெறும் பெரு விளையாட்டுகளில் கரபந்தாட்டம், காற்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள அணிகளே திருமலைக்குச் செல்கின்றன.

மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர் குழு அடுத்த வாரத்தில் அங்கு செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போட்டிகள் எதிர்வரும் 26 ஆம்,29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள ஏனைய மாவட்டப் பாடசாலைகளில் பெண்களுக்கான கரபந்தாட்டம் எல்லே மற்றும் கபடிப்போட்டிகள் நடைபெற்று வருகின்ற போதும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே மேற்படி போட்டிகள் நடத்தப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-10-86)

# வசதிகள் ஏதுமின்றி இயங்கும் யாழ். வருமானவரி அலுவலகம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நாட்டின் ஏனைய இடங்களில் இயங்கும் வருமான வரித் திணைக்கள அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதி வாய்ப்புகள் எவையும் யாழ். மாவட்டத்தில் இயங்கும் வருமான வரித் திணைக்களத்துக்கு வழங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.

— இவ்வாறு யாழ். வருமான வரித்திணைக்கள அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

நாடு முழுவதிலும் 22 வருமான வரித் திணைக்கள அலுவலகங்கள் இயங்குகின்றன. அவற்றுக்கு 'பக்ஸ்' இயந்திரம், கணனி மற்றும் நவீன வசதிகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் யாழ். நகரில் இயங்கி வரும் எமது அலுவலகத்துக்கு 'பக்ஸ்' இயந்திரம் கூட வழங்கப்படவில்லை. இருந்தும் கடந்த வருடம் நாம் வருமான வரியாக 10 லட்சம் ரூபாவும், விற்பனை வரியாக 70 லட்சம் ரூபாவும் அறவிடு செய்துள்ளோம்.

பெருமளவு ஊழியர் வெற்றிடம் நிலவும் எமது அலுவலகத்தில் நீண்டகாலமாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கு பதவி உயர்வுகள் கூட வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (க-6)

## சுயதொழில் முயற்சிக் கடன்

யாழ்ப்பாணம், ஜூன் 13

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் வண்ணை வடமேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கென சுயதொழில் முயற்சிக் கடனாக 50 ஆயிரம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த பெண்களின் சுயதொழில் முயற்சிக்கு மீளளிப்புச் செய்யும் வகையில் கடனாக வழங்கப்படவுள்ளதாகச் சங்கத்தின் தலைவி ஆ. ஜெயகுமாரி தெரிவித்துள்ளார். (க-10)

## பொலீஸில் சரண்

கொழும்பு, ஜூன் 13

அமைச்சர் . எஸ். பி. திசாநாயக்கவின் மகனைத்தாக்கி காயப்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் மூவர் திங்களன்று கோட்டை பொலிஸ் சரணடைந்துள்ளனர்.

இவர்களைக் கொம்பனித் தெரு நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததை அடுத்து நீதிவான் மூவரையும் தலா 25 ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்ததாகக் கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச். எம். தர்மசேன தெரிவித்தார். (க)

# இரத்ததானம் ஆபத்தானது என்ற தப்பபிப்பிராயம் நீங்க வேண்டும்!

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசான் அழகையா துரைராஜாவின் நினைவு நாளை ஒட்டி யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம்இன்று இரத்ததான நிகழ்வுக்கு ஏற்பாடு செய்துள்ளது. அதனை ஒட்டி இச் சிறு குறிப்பு பிரசுரமாகின்றது.

அமரர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களை நாம் நினைவிற் கொள்ளும் நாள் இன்றாகும். நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழர்களின் திறமைகளை உலகெங்கும் பறைசாற்றிய பல்வேறு கல்விமான்களில் தனக்கென்று தனிமுத்திரை பதித்த தன்னிகரில்லாக் கல்வியாளன். புகழேணியின் உச்சியில் நின்றபோதும், சாதாரண வாழ்க்கை வாழ்ந்த பெருந்தகை, எளிமை, தன்னடக்கம், பொறுமை, அமைதி, சாந்தமான புன்னகை, இவை அன்னாரை அலங்கரிக்கும் அணிகலன்கள். நெருக்கிடையான காலகட்டத்தில் யாழ். பல்கலைக் கழகத்தை தடம்பிறழாமல் காத்துநின்ற காவலரண். இலைமறைகாயாக மாணவர்கள் மத்தியிலும், தமிழர்களின் நெஞ்சங்களிலும் வாழ்ந்து மறைந்த வள்ளல்.

தமக்குத்தாமே விழா எடுக்கின்ற, தம்மைத்தாமே புகழுகின்ற, பாராட்டுவிழாக்களிற்காகவும், பதவிகளிற்காகவும், மாலை, மரியாதைகளுக்காகவும் வாழுகின்ற இன்றைய சில பேராசான்களின் மத்தியில் இவற்றையெல்லாம் துறந்து கடமையேகண்ணென வாழ்ந்து மறைந்த பெருந்தகை அவர்.

கடந்த மூன்று வருடங்களாக அன்னாரது நினைவு நாள்களில் எமது ஒன்றியம் அஞ்சலிக் கூட்டத்தையும், அதனைத் தொடர்ந்துஇரத்ததான நிகழ்வையும் மேற்கொண்டு வருகின்றது.

விவசாயத்தையும், கால்நடைவளர்ப்பையும், கூலித் தொழிலையுமே ஆதாரமாகக் கொண்டு, வாழ்ந்து வந்த எமது மாவட்ட மக்கள், தமது பிள்ளைகளையும் தமது குடும்பத் தொழிலிலேயே கவனம் செலுத்தச் செய்தனர். இவ்வாறான சூழ்நிலையில் எமது மாணவருக்குக்கல்வியின்பால்தாகத்தையும், ஈர்ப்பையும் ஏற்படுத்தியதில் அமரர் துரைராசா பெரும்பங்காற்றினார்.

பேராசிரியரின் விடா முயற்சியாலும், அயராத உழைப்பினாலும் யாழ். பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாக விவசாயபீடம் கிளிநொச்சி மாவட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பீடத்தின் துளிர்விற்குப்பின்னரே, எமது மாணவர்கள் கல்வியின்பால் ஆர்வங் கொண்டார்கள். அதுவரையில் உறங்கிக்கிடந்த — கல்வியில் அக்கறையில்லாமல் இருந்த — மாணவர்கள். தாமும்தொடர்ந்துகற்றுபல்கலைக்கழகம் சென்றுநன்னிலை அடைய வேண்டும் என்ற அவா மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் ஏற்பட விவசாய பீடத்தின் உதயமும் ஒரு காரணமாகும்.

இது தவிர யாழ். பல்கலைக் கழகத்தின் பொறியியற்பீடம் முறிகண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக நிறுவுவதற்குரிய ஆரம்பகட்ட வேலைகளும் அன்னாரது காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டன.

இன்று எமது மாவட்டம் ஈழயுத்தத்தின் வரலாற்றுச் சான்றாய் தரைதட்டி, புதர்மண்டி, கண்ணிவெடி நிறைந்த பூமியாய்க் காட்சி தருகின்றது. தொடர்கின்ற யுத்தம் விடைபெற்று அமைதி இம்மண்ணில் நிலவும் போது' எமது மாவட்டத்தை அடி அத்திவாரத்தில் இருந்து கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு இங்கு கல்விபயிலுகின்ற எமது மாணவர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

எமது மாணவர்கள் வெறுமனே புத்தகப் பூச்சிகளாய் மட்டும் சமூகத்தோடு இணைவதில் எவ்வித பயனுமில்லை. கற்கும் போதே சமூகத்தின் தேவையறிந்து, சேவைசெய்யும் பக்குவமுள்ளவர்களாக வளரவேண்டிய-- வளர்க்கப் படவேண்டிய பாரிய தேவை இன்றுள்ளது. குடாநாட்டின் மாணவச் செல்வங்கள் தடம் மாறி அடிதடியிலும், மது, புகையிலும் தம்மை ஈடுபடுத்தி வருகின்ற துர்ப்பர்க்கியமான சூழ்நிலையில், எமது மாணவர்கள் குடும்ப. சமூக, கலை, கலாசார சூழ்நிலைகளை நன்குணர்ந்து அதற்கேற்ப தம்மைத் தயார்ப்படுத்த இவ்வாறான செயல்கள் பயனளிக்கும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

## இரத்ததானம்

இரத்ததானம் தொடர்பாக எமது மக்கள் மத்தியில் தெளிவான விளக்கங்களிற்குப் பதிலாக தப்பபிப்பிராயங்களே வேரூன்றி விழுதெறிந்து நிற்கின்றன' இவர்களது பயங்களுக்கும். சந்தேகங்களுக்கும் இதுவரையில் எந்த ஆராய்ச்சிகளோ, அனுபவங்களோ சான்றுபகரவில்லை. எம்மவர்கள் மத்தியில் உருவெடுத்துள்ள இவ்விதமான சந்தேகங்களால், தமது இரத்த உறவுகளிற்கே குருதி வழங்க மறுப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இவ்வாறான தப்பபிப்பிராயங்கள் எம்மத்தியில் இருந்து களையப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் எமது ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வுகளில் பங்கேற்று இரத்ததானம் செய்த அனைத்து அன்புள்ளங்களையும் நன்றியோடு நினைவிற் கொள்கின்றோம்.

இம்முறையும் அன்னாரது நினைவாக யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ள இரத்ததான நிகழ்வில் பங்கேற்று இரத்ததானம் செய்யும் கொடையாளிகளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

ஏனைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களும், பொது அமைப்புகளும் இவவாறாக, முக்கிய நாள்களில் தமது அமைப்புகள் ஊடாக இரத்ததானம் செய்ய முன்வரவேண்டும்.

''எம்மையே தானமாகக் கொடுக்கின்ற இந்தத் தானத்தை விட சிறந்தது உலகில் வேறேது'' காலத்தின் தேவைகளிற்கேற்ப வாழப்பழகிக் கொள்வோம். தமது குருதியைக் கொட்டி எம்மின விமோசனத்திற்காய் உழைத்து நிற்கின்ற இளைஞர்கள் மத்தியில் எமது குருதியாவது ஒருயிரை 'மாமனிதன்' அமரர் பேராசிரியர் அ. துரைராஜா நினைவாகக் காக்கட்டும். ★

**கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம், யாழ், பல்கலைக்கழகம்**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த செல்வி. வேலுப்பிள்ளை யமுனாவதி என்பவருடைய தேசிய.அ.அட்டை (இல. 807351680v), விசேட அ.அட்டை (இல. 0903001381) என்பன கடந்த 04.06.2001 அன்று யாழ்ப்பாணம் நவீன சந்தை, யாழ். பஸ் நிலையப்பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியிலோ அல்லது கஸ தூரியார் வீதியிலுள்ள வினோ நகைப் பூங்காவிலோ ஒப்படைத்து உதவ வும். (88942)

மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறை என்னும் முகவரியைச் சேர்ந்த சிவசம்பு ஸ்ரீதரன் என்பவரது விசேட அ.அட்டை (இல0907001606), பல்கலைக் கழக அடையாள அட்டை என்பன 04.06.2001 அன்று கோப்பாய்க்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் S.விக் கினேஸ்வரி (விரிவுரையாளர்), பாட சாலை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப் படைத்துதவவும். (88950)

வட்டு. மேற்கு வட்டுக்கோட்டை யைச் சேர்ந்த கந்தசாமி ஜெயக்குமார் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.573552016v), விசேட அ.அட்டை என்பன யாழ். பஸ் நிலையப்பகுதியில் 11.06.2001 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கற்பக விநாயகர் அச்சகம், யாழ்ப் பாணம் எனும் முகவரியில் ஒப்படைத் துதவவும். சன்மானம் வழங்கப்படும். (88957)

பாசையூரைச் சேர்ந்த K.யதீந்திர தாஸ் என்பவருடைய கைச்சங்கிலி (யாழ்.நவீன சந்தையில் இருந்து) சுண்டுக்குழி ஊடாக பாசையூருக்கு இடையில் 10.06.2001 ஞாயிற்றுக் கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தயவுசெய்து யாழ்.ஆஸ்பத் திரி வீதியிலுள்ள ஆர்.வி.ஜி. மருந் தகத்தில் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (88937)

## ஒரு காதலின் கதை

பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் பற்றி அறிய வேண்டுமா? 325 நாடகங்கள் எழுதிய அராலியூர் நந்தசுரம்பிள்ளை ஒரு கொழும்பு வர மலரில் எழுதும் தொடர் கதையின் இவ்வாரக் கதையை வாசித்துப் பாருங்கள். (88970)

## விற்பனைக்கு

EN.தொடர் இலக்கமுடைய A-50 கேம்பிரிச் கார் (நல்ல நிலையில் உள் ளது) உடன் விற்பனைக்கு உண்டு. மோட்டார் சைக்கிள் மாற்ற விரும்பு வோரும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:- S.அன்ரன், அளவெட்டி OR C.L.S. வைத்தியசாலை வீதி, யாழ்ப் பாணம். (88940)

பாவித்த, நல்ல நிலையில் உள்ள வாங்குகள் 10'X1', கைக்கதிரைகள தமிழ் சினிமாப் பட வீடியோ நாடாக் கள் என்பன விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- ஐ.சிவபரன், C/O- P.அமிர்தலிங்கம், மானிப்பாய் வீதி, தாவடி தெற்கு, கொக்குவில். (88971)

## இறைச்சிக்கோழி விற்பனை

Broiler, Cullbirds, Cockerels, Soup குஞ்சு, இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் காலை 6.30 - மாலை 6.00, குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள லாம். தொடர்பு:- 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் 'வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச சந்தையடி, நல்லூர். (88968)

புறொயிலர், சேவல், கல்பேட் என்பன மொத்தமாகவும், சில்லறை யாகவும் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய் தல் இலவசம். 31, மாண்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (88836)

## காணி விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக இல.558 இல் ஒரு பரப்புக் காணி யில் இரு கடைகள் விற்பனைக் குண்டு. ஒவ்வொரு கடையும் தலா 15'x30' விஸ்தீரணம் உடையவை. தொடர்புகளுக்கு: T.P 597450/077-307227. (C/17039)

## இன்று வியாழமாற்றம்

வாக்கிய பஞ்சாங்கப்படி இன்று வியாழன் மிதுனராசிக்கு இடம் பெயர் கிறார். திருக்கணிதப்படி 16.06.2001 சனிக்கிழமை மிதுனராசிக்கு மாறு கிறார். புதிய வெளியீடு, ரூபா10/=. வியாழமாற்றம் எங்கும் விற்பனை யாகின்றது. கணிப்பாசிரியர்- சத்யா, ஆனைக்கோட்டை. (88975)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த சைவ போசனமுடைய விசாக நட்சத்திரம், 3ஆம் பாதம், 1962இல் பிறந்த, 7இல் செவ்வாயுள்ள பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியைக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் எதி பார்க்கின்றனர். அரச தொழில் புரி பவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் வழங்கப்படும். தொடர்பு: ஆ.சபாரத் தினம், 37/22 A, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.(88809)

## O/L கணிதம்

பழைய, புதிய பாடத்திட்டத்திற் கமைய அட்சரகணிதம், கேத்திர கணி தம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப் படும். க.ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (88949)

## வீடு விற்பனைக்கு

234/4ஆம் இலக்கமுடைய K.K.S வீதியில் அமைந்துள்ள வீடும் காணி யும் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ஆனந்தபாபதி, 234/4, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (88916)

கல்வளை, சண்டிலிப்பாயில் 3 1/2 பரப்புக் காணியில், 86ஆம் ஆண்டு கட்டப்பட்ட பெரிய வீடு உடன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- Mrs.R.P. Chellaih, Elephant villa, Dutch Road, Uduvil. (88978)

## விற்பனைக்கு உண்டு

வீட்டுத் தளபாடங்கள், மின் கருவி கள், இறக்குமதி செய்யப்பட்ட வீட்டுப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-திருமதி R.P.செல லையா, Elephant villa, Dutch Road, Uduvil. (88979)

## புத்தூர் இளைஞர் கைதானார்

யாழ்ப்பாணம்,ஜூன்13

புத்தூர்ப் பகுதியைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவல கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள் ளது.

புத்தூர் சர்வோதய வீதியைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் பூங்குன்றன் (வயது 24) என்பவரே கடந்த 3ஆம் திகதி அச்செழு வைத்துப் படையின ரால் கைது செய்யப்பட்டவராவார். (க-10-173)

## நெல்லியடியில் கண்காட்சி

தென்மராட்சி,ஜூன்13

தென்மராட்சி கல்வி வலயத்துக் குட்பட்ட பாடசாலை மாணவர்களின் ஏற்பாட்டில் புது யுகத்திற்கான வழி காட்டல் மாணவர் ஆக்கக் கண்காட்சி யும் சமூகக்கல்விப் போட்டிக்கான காண்காட்சியும் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் நெல்லியடி மத் திய மகா வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக நெல்லி யடி மத்திய மகா வித்தியாலய அதிபர் சி.சிற்றம்பலம் கலந்து கொள்வார்.

கண்காட்சியை 16ஆம் திகதி சனிக்கிழமை மாணவர்களும், 17ஆம் திகதி பொதுமக்களும் பார்வையிட லாம் என்று வலயக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். (ம-117)

## கொடிகாமம் மாணவர்களின் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,ஜூன்13

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் மூலம் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப் பித்த மாணவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பெற்றோரின் தேசிய அடையாள அட்டைகளுடன் நெல்லியடியில் உள்ள கிறிஸ்ரல் கல்வி நிலையத்துக்குச் சமுகமளிக் குமாறு பாடசாலை அதிபர் சி.கந் தையா கேட்டுள்ளார்.

விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த மாணவர்களில் ஒரு தொகுதியினரின் அடையாள அட்டை கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் - உரியவர்கள் நேரில் சமுகம ளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ள லாம் எனவும் - அவர் தெரிவித்துள் ளார். (க-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் பரம்பரைக் குருமணி
**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்**
அவர்கள் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாகத் தெரிவாகியதையிட்டு நாங்கள் அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்தி வணங்கு கின்றோம்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், மகாசபை உறுப்பினர்கள். (88974)
இ.ஸ்ரீராகவன், ந.விஸ்வநாதன், நா.க.துரைமணி, சி.தனபாலசிங்கம்.

வெளிவாரி மாணவர்களே!
இதோ வெளிவந்து விட்டது!!
GRAMMAR FOR ESL LEARNERS
LEVEL -1
*by:-M.Saravanapava Iyer*
வெளிவாரிப்பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பாடவிதானத்துக்கு அமைய பயிற்சிகளுடன் எழுதப்பட்டுள்ளது.
கிடைக்கும் இடம் :- வெளிவாரிப்பதிவு, பரீட்சை அலகு, யாழ். பல்கலைக்கழகம்.
விலை ரூபா150/- (சொற்ப பிரதிகளே கையிருப்பில் உள்ளன) (88989)

## பாராட்டுகின்றோம்

திருமலையில் நடைபெற்ற சாரணர் ஜம்போரியில் பங்குபற்றுவதற்காக, பருத்தித்துறை மாவட்ட சாரணர்களுக்கு இலவச பிரயாண வசதிகளைச் செய்து உதவிய, வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் மாண்புமிகு கௌரவ
**டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்,**
பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர்
**திரு. ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன்**
மற்றும் திருமலை மாவட்ட இணைப்பாளர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
*பருத்தித்துறை.* (C/17074)
பருத்தித்துறை மாவட்ட சாரணர்.

## மனதார வாழ்த்துகின்றோம்

*தீவகத்தின் அபிவிருத்தி கருதி எம்மை நியமனம் செய்த*



மாண்புமிகு அமைச்சர் கௌரவ
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்



*ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்டப் பிரதி அமைப்பாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்*
**திரு. N.மதனராஜா**
அவர்களையும்

*வேலணைப் பிரதேச சபைத் தலைவர்*
**திரு. N.கருணாகரகுருமூர்த்தி** அவர்களையும்
உளமார வாழ்த்தி, பெரு உவகையுடன் நன்றி கூறுகின்றோம்.
போதானாசிரியர்,
அபிவிருத்தித் தொண்டர்கள்,
*வேலணைப் பிரதேச செயலக பிரிவு,*
*வேலணை.*
(88993)

## காணி விற்பனைக்கு

சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் கோயிலுக்கு அண்மையில் 8 அடிப்பாதையுடன் கூடிய 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
திருமதி புஸ்பராஜாலிங்கம் சாரதாம்பாள்
*சிவன் கோயிலடி,*
*சித்தன்கேணி.*
(C/17073)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் கந்தப்பு மாணிக்கம்**
(துவிச்சக்கர வண்டி திருத்துநர், நெல்லியடி)
கடந்த 15.05.2001இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (14.06.2001) வியாழக்கிழமை நடை பெறவிருப்பதனால் அனைவரும் தவறாதுவந்து கலந்துகொண்டு அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
*கரவெட்டி தெற்கு,*
*கரவெட்டி.* (88990)
- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சோ.விமலசிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர்)
சண்டிலிப்பாய் மேற்கு, மணிமேகன் சனசமூக நிலையத் தலைவரும் சண்டிலிப்பாய் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், சண்டி லிப்பாய் வேவிற்பதி ஐயனார் ஆலய பரிபாலனசபை உபசெயலாளரு மாகிய அமரர் சோ.விமலசிங்கம் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
மணிமேகன் சனசமூகநிலையம்,
(C/17072) சண்டிலிப்பாய் மேற்கு.

## ஈடில்லா இழப்பினில் ஓராண்டு நினைவலைகள்



மண்ணில் 18 - 12 - 1969
விண்ணில் 24 - 05 - 2000

**அமரர் கந்தசாமி சிவபாலன் B.COM.**
*(ஆசிரியர், பளை மத்திய கல்லூரி)*

புன்னைமரக் குயிலொன்றை
பூமிக்கு அழைத்து வந்தாய்!
புதியன புகட்டி புதுயுகம்
காணவென்று........
கொடியவன் ஏவிய எரிகணைக்கு
இரைகொடுக்க அழைத்தனையே - இறைவா?
தன்பிள்ளை தவப்பிள்ளை தானுணர்ந்த
தந்தையும் தாரமதனைவிட்டுப் பிரிய
தன் குடும்பம் முன்னேற கற்பனையும், சிந்தனையும்
அத்தனையும் மறந்துதான்......
அத்தன் காலடியில் ஆறி அமர்ந்தனையோ?

*சாவகச்சேரி வடக்கு.* (88991)
தாய், மனைவி, மகன், சகோதரர், மருமக்கள்.

## பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் உரை

# அரசியலில் இந்து மத குருமார் அதிக ஈடுபாடு காட்டுவதில்லை

## இனி அந்தக் குறை நீங்கிவிடும்

யாழ்ப்பாணம்,ஜூன்13

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஏனைய மதத் தலைவர்கள் காட்டிவரும் ஈடுபாடு போன்று இந்துமதத் தலைவர்கள் இந்த விடயத்தில் ஈடுபாடு காட்டுவதில்லை என்ற குறை இதுநாள் வரையும் இருந்து வந்தது. ஆனால் இனி மேல் அந்த நிலை தொடராது. இந்து மத குருபீடத்துக்கு ஒரு பீடாதிபதி தெரிவு செய்யப்பட்டதன் மூலம் இந்தக் குறை நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற இந்துமத குரு பீடாதிபதி தெரிவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது:-

சர்வதேச ரீதியில் ஒரு சமூகம் அல்லது நிறுவனம் தன்னை இனங்காட்டிக்கொள்ள வேண்டுமானால் அது தன் அங்கத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தனது அங்கத்தவர்களை அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

நல்ல திறமையுள்ள, ஆளுமையுள்ள பல குருமார்கள் இன்று யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிவிட்டனர். எமது மதத்தையும் அதனைப் பின்பற்றும் மக்களையும் தலைமை வகித்து வழி நடத்தக் கூடியவரும் எமது தேவைகளை நிறைவேற்றக் கூடியவருமான ஒரு பீடாதிபதி இன்றைய நிலையில் அவசியமாகத் தேவைப்படுகிறார்.

பௌத்த மதத்தினர் மகா சங்கத்தை அமைத்து மகா நாயக்கரைத் தெரிவு செய்துள்ளனர். அவருக்கு இந்த நாட்டின் அரசியலில் ஒரு காத்திரமான பங்கும் செயற்பாடும் இருக்கிறது

எமது நாட்டின் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க கிறிஸ்தவ தலைமைகள் முன்வந்துள்ளன. ஆனால் இங்கு சைவசமய மக்கள் அதிகமாக வாழ்ந்தும் தமக்கென ஒரு அமைப்பையோ தலைமைத்துவத்தையோ கொண்டிருக்கவில்லையென்பது வருத்தத்துக்குரியது - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன் தனதுரையில் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர்களும் யுவதிகளும் பணத்துக்காகவும் அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும் புதுப்புது சமயங்களில் சேர்ந்து வருகின்றனர். நாட்டில் ஏற்பட்ட இடம்பெயர்வுகள் காரணமாக பல கோயில்கள் இன்று பூசைகள் இன்றிக் கிடக்கின்றன. அந்தணர்களை அங்கே குடியேற்றவும் கோயில்களில் பூசைகள் இடம்பெறவும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலம் நடவடிக்கை எடுக்க உள்ளோன்.

தமிழர்களின் பாரம்பரிய பூமியான யாழ்ப்பாணத்தில் இன்று சமய, கலாசார மதமாற்றங்கள் தீவிரமாக நடைபெறுகின்றன.

இன்று நடைபெற்ற குரு பீடாதிபதி தெரிவின் மூலம் அவை தடுக்கப்பட்டு எதிர்காலத்தில் பாரம்பரிய சைவ பூமியாக யாழ்ப்பாணம் விளங்கும் - என்றார்.

"முத்தமிழ்க் குருமணி" சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் சிவஸ்ரீ ச.சிதம்பரநாதக் குருக்கள் ஆகியோரும் உரைநிகழ்த்தினார்கள்.

# யாழ்நகர் கரையோரப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

## புதிய காவலரண்கள், முட்கம்பி வேலிகள் அமைக்கப்படுகின்றன

யாழ்ப்பணாம்,ஜூலை13

யாழ்நகரின் கரையோரப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. இராணுவத்தினர் ஆங்காங்கே புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர். பனை மரங்கள் நடப்பட்டு கடற்கரைப் பகுதியில் முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு வருகிறது.

குருநகர் கடற்கரை வீதியிலும் புதிய வீதித் தடைகள் அமைக்கப்பட்டு, முட்கம்பி வேலிகளும் போடப்பட்டுள்ளன. அங்கு பெருமளவு இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

ஊர்காவற்றுறை வீதியில் துரையப்பா விளையாட்டரங்கின் முகப்புப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் பண்ணைப்பாலப் பகுதியிலும் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருவதுடன் தூர்ந்து போயிருந்த 'பங்கர்'களும் மீள அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.கோட்டையைச் சுற்றி இருந்த பற்றைகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 'புல்டோசர்' மூலம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலும் இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

(க-6)

# 20 லட்சம் ரூபா செலவில் தீவுப்பகுதி சேவைக்குப் படகு

## நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் கட்டுகிறது

நெடுந்தீவு,ஜூன்13

நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம் புதிய படகு ஒன்றைக் கட்டிவருகின்றது.

மேற்படி படகுக்கான கட்டுமானப் பணிகளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

பயணிகள் சேவையிலும் பொருள்களை ஏற்றி இறக்கும் பணியிலும் ஈடுபடத்தக்கவாறு புதிய படகு அமைக்கப்படும் என சங்கத்தின் உப தலைவர் எஸ்.கணேசலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இருபது லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுவரும் இப்படகு 'சமுத்திர தாரகை' என்ற பெயரில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தனது சேவையைத் தொடங்கும் எனவும் கூறப்பட்டது.

(ம-111)

# நிரந்தர சந்தை வசதியின்றி ஆனைக்கோட்டை மக்கள் சிரமம்

ஆனைக்கோட்டைப் பகுதியில் நிரந்தர சந்தையொன்று இல்லாததினால் அப்பகுதி மக்கள் பலமைல் தொலைவிலுள்ள சந்தைகளுக்குச் சென்றே பொருள்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய துர்ப்பாக்கியநிலை தொடர்கிறது.

இதன் அயல் கிராமங்களாகிய சாவற்கட்டு, மானிப்பாய் நவாலிப் பகுதியில் நிரந்தர சந்தைகள் இருந்தும் ஆனைக்கோட்டையில் நிரந்தரமான சந்தை ஏதும் இல்லை.

தற்போது ஆனைக்கோட்டைச் சந்திக்குச் சமீபமாக மாலை வேளையில் தனியார் காணி ஒன்றில் மீன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இங்கு வருவோர் சைக்கிள்களையும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும வாகனங்களையும் வீதியோரம் நிறுத்திவிடுவதினால் எதிர் எதிரே வரும் கனரக வாகனங்கள் ஒன்றையொன்று விலத்தமுடியாமல் அடிக்கடி விபத்துக்குள்ளாவதையும் அவதானிக்க முடிகிறது.

இப்பகுதியில் நிரந்தர சந்தை ஒன்றை சம்பந்தப்பட்டவர்கள் அமைத்துக் கொடுத்தால் மக்களின் கஷ்டம் நீங்குவதுடன் விபத்துக்களையும் தடுக்க முடியுமென பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

(க-7-100)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜூன்13

குப்பிளான் கற்பக விநாயகர் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ம-4)

# சமாதான முயற்சிகளின் பிந்திய நிலை குறித்து

# இந்திய - நோர்வேத் தூதுவர்கள் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு

கொழும்பு,ஜூன்13

இலங்கைக்கான நோர்வே சமாதானத் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க் சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து இந்தியத் தூதுவர் கோபால் கிருஷ்ணகாந்தியை அண்மையில் சந்தித்து நீண்டநேரம் உரையாடியதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

நோர்வே வெளியுறவு அமைச்சர் த்ரொப் ஜோன் ஜக்லாண்ட் ஒஸ்லோ புறப்பட்டுச் சென்ற பின்னர் இந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. இச்சந்திப்பில் நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெம் பங்குபற்றவில்லை.

சமாதானப் பேச்சுக்கான முயற்சிகளில், நோர்வேயின் சிறப்புப் பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம் புறந்தள்ளப்பட்டது பற்றியும் -

சமாதான முயற்சிகளில் நோர்வே தனது உயர்மட்டப் பங்களிப்பை வழங்க இருப்பது குறித்தும் -

அமைதி முயற்சியின் தற்போதைய நிலைவரம் தொடர்பாகவும் -

இந்தியத் தூதுவரிடம் வெஸ்ட்போர்க் விளக்கியதாகக் கூறப்படுகிறது.

எரிக் சொல்ஹெய்ம் அமைதி முயற்சிகளில் ஈடுபட்டிருந்த சமயத்தில், தனது முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது இந்தியாவிடம் நேரடியாகத் தெரிவித்து வந்தார். தற்போது அமைதி முயற்சிகளில் நோர்வே உயர்மட்டப் பங்களிப்பை வழங்குவதாக அறிவித்திருப்பதால், பேச்சு முயற்சிகள் குறித்து இந்தியத் தலைவர்களிடம் உடனுக்குடன் தெரிவிக்கும் நடவடிக்கை தொடருமா என்பது தொடர்பாக நோர்வே தரப்பில் எவையும் கூறப்படவில்லை.

இனிமேல் பேச்சுக்கள் பற்றி தூதரக மட்டத்திலான தகவல் பரிமாற்றங்கள் மட்டுமே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் -

இதனை இந்தியா ஏற்றுக்கொள்ளுமா என்று சந்தேகம் உள்ளதாகவும் -

அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க -

சமாதான முயற்சிகளில் இருந்து இலங்கை அரசால் புறந்தள்ளப்பட்டதாகக் கூறப்படும் எரிக் சொல்ஹெய்ம், கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசியுள்ளார். இந்தச் சந்திப்புக் குறித்த விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

(ம-ஒ)

# மாவனல்ல வன்முறைகள் தொடர்பாக கைதான 12 பேருக்கு பிணை அனுமதி

## ஐவர் தொடர்ந்தும் விளக்க மறியலில்

கொழும்பு,ஜூன்13

மாவனல்ல வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 12 சந்தேகநபர்களும் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

41 நாள்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் அனைவரும் பலத்த பாதுகாப்புடன் நேற்று முன்தினம் மாவனல்ல மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிவான் இவர்களை பிணையில் செல்ல அனுமதித்தார்.

### ஐவருக்குப் பிணை இல்லை

இதேவேளை -

மவனல்லையில் முஸ்லிம் வர்த்தகர்களிடம் கப்பம்கேட்டு வன்முறை வெடிப்பதற்குக் காரணமாக இருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேறு 5 நபர்களை பிணையில் விடுவிக்க மறுத்த நீதிவான், அவர்களை எதிர்வரும் 18ஆம திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.(க-7)

# லைசென்ஸ் இன்றி மோ.சைக்கிள் செலுத்துபவர்களிடம் அபராதம்

## மானிப்பாய் பொலீஸார் நடவடிக்கை

வலி.மேற்கு,ஜூன்13

மானிப்பாய்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் பரிசோதனை செய்யப்பட்டு பொலீஸாரினால் அந்த இடத்திலேயே குற்றப்பணம் அறவிடப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக மானிப்பாய்ப் பொலீஸார் வீதிகளில் மோட்டார் சைக்கிள்களை வழிமறித்துப் பரிசோதனை செய்து வருகின்றனர்.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களிடம் அந்த இடத்தில் வைத்தே அபராதப் பணம் அறவிடப்படுகின்றது.

இதேவேளை -

யாழ்.செயலகத்திலுள்ள போக்குவரத்துப் பிரிவில் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கச் செல்கின்றவர்களிடம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை எனத் தெரியவருகின்றது.

இந்நிலையில் பொலீஸார் குற்றப் பணம் அறவிடுவதைத் தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டுமென மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் சீரான முறையில் யாழ்.செயலக மோட்டார்ப் பகுதியினர் சாரதிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இதனால் பெரும் எண்ணிக்கையானோர் சாரதிக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகத் தெரிகின்றது.

அண்மையில் யாழ்.செயலகத்தினரால் குறிப்பிட்ட ஒருசில தினங்களில் மிகக் குறைவானவர்களுக்கே சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(க-175)

## சொக்கனின் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்மன்றம் நடத்தும் வித்துவான் க.சொக்கலிங்கம் எழுதிய "இலக்கியக் கருவூலம்' நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

தமிழ் மன்றத் தலைவர் அ.பௌநந்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மஹாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக் குருக்கள பேராயர் சு.ஜெபநேசன் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவுள்ளனர்.

வாழ்த்துரையை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் வெளியீட்டுரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும், ஆய்வுரைகளை பண்டிதர் செ.திருநாவுக்கரசு, கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ம-4)

# பெண்கள் மீதான குற்றங்களுக்கு உதவும் பயங்கரவாதத் தடைச் சட்டம்

## மகளிர் அபிவிருத்தி நிலையம் விசனம்

பம்பலப்பிட்டியில் கைதான இரு தமிழ்ப் பெண்கள் கொடூரமான பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டது உட்பட நாட்டில் அதிகரித்து வரும் அது போன்ற கொடுமைகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விளைவுகளே.

- இவ்வாறு மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் சரோஜா சிவச்சந்திரன் தெரிவித்தார்.

பத்திரிகை அறிக்கை ஒன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தலையிட்டு அது குறித்து நடவடிக்கை எடுத்து வரும் மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர் மனோரி முத்தெட்டுவேகம ஆற்றும் பங்கை வரவேற்பதோடு, அதற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஆதரவு தருகிறது என்றும் சரோஜா சிவச்சந்திரன் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாத இறுதியில், சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வி கந்தையா சிவரஞ்சனி (வயது21) வவுனியாவைச சேர்ந்த திருமதி விமலாதேவி ராமச்சந்திரன் (வயது39) ஆகியோர் பம்பலப்பிட்டியில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்த சமயம், பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கொடூரமான முறையில் பாலியல் சித்திர வதைகளுக்கு உள்ளாக்கபட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

(க-ஓ)

# வட்டு. மிருகவைத்தியர் அலுவலகம்

வலி.மேற்கு,ஜூன்13

வட்டுக்கோட்டை மிருக வைத்தியர் அலுவலகம் மாவடிச் சந்தியில் அமையவுள்ளது.

வட்டுக்கோட்டை மிருக வைத்தியர் அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கு வட்டுக்கோட்டை உடல் உள அபிவிருத்திச் சங்கத்தினர் 99 ஆண்டு குத்தகையில் மாவடிக் கந்தசாமி கோயில் காணியைப் பெற்றுள்ளனர்.

குத்தகைப் பணமாக 50 ஆயிரம் ரூபா ஆலயத்துக்கு செலுத்தப்படவுள்ளது. இப்பகுதியிலுள்ள தனவந்தர்களிடம் தற்போது நிதி சேரிக்கப்பட்டு வருகின்றது. (க-175)

# [illegible]வரின் 'சீசன் டிக்கெட்' தாமதத்திற்கு பாடசாலை நிர்வாகங்களும் காரணம்

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்13

மாதாந்த பருவச் சீட்டுக்காளைப் (சீசன் டிக்கெட்) பெறுவதற்கான பட்டியல்களை சில பாடசாலைகள் காலம் தாழ்த்தியே சமர்ப்பிக்கின்றனர். இதனாலேயே பருவச் சீட்டு வழங்குவதும் தாமதமாகின்றது.

இவ்வாறு அறிவித்துள்ளார் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் க.மணிவாசகன்.

'மாதாந்த பருவச் சீட்டுகள் நேரகாலத்துடன் கிடைப்பதில்லை. இதனால் பாடசாலை மாணவர்கள் பாதிப்பு' என்ற தலைப்பில் கடந்த 8ஆம் திகதிய உதயனில் செய்தி ஒன்று வெளியாகி இருந்தது.

இந்தச் செய்தி குறித்து விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பிலேயே பொது முகாமையாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் குறிப்பின் விவரம் வருமாறு:-

பருவகாலச்சீட்டு விற்பனை ஒவ்வொரு மாதமும் முதல் மாதம் 26ஆம் திகதியிலிருந்து அந்த மாதம 05ஆம் திகதி வரை நடைபெறு கின்றது. பாடசாலை மாணவர்களது பட்டியல் முதல் மாதம் 20ஆம் திகதியளவில் பாடசாலைகளினால் எமது சாலைகளுக்கு சமர்ப்பிக்கப்படுமாயின், எம்மால் பருவகாலச் சீட்டுகள் எழுதப்பட்டு அந்த மாதம் 27, 28ஆம் திகதிகளில் பாடசாலைகளுக்கு ஒப்படைக்க வசதியாக இருக்கும்.

ஆனால் சில பாடசாலைகள் தமது மாணவர்களின் பட்டியலை 29, 30ஆம் திகதிகளிலும் அதன் பின்னரும் எமக்குச் சமர்ப்பிக்கின்றனர். குறிப்பாக வைகாசிமாத பருவகால சீட்டுகள் பெற்றுக் கொள்வதற்கான பட்டியல் சில பாடசாலைகளினால் எமக்கு முதலாம், 3ஆம் திகதி யன்றும் சமர்ப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு காலம் பிந்தி சமர்ப்பிக்கப்படும் பாடசாலைகளின் பட்டியல்களுக்கான பருவகாலச் சீட்டுகள் எழுதப்பட்டு வழங்குவதில் ஓரிருநாள்கள் தாமதிக்கலாம். எமக்குத் தற்போது ஆளணிப் பற்றாக குறை நிலவுகின்றது. சில சந்தர்ப்பங்களில் பருவ காலச்சீட்டுகள் எழுதி முடித்தாலும், சில பாடசாலைகளால் அச் சீட்டுகளை உடனடியாக பொறுப்பேற்று மாணவர்களுக்கு வழங்கப்படாததினாலும் தாமதங்கள் ஏற்படுகின்றது.

எனவே பாடசாலை அதிபர்கள் மாணவர்களின் நன்மை கருதி பருவகாலச் சீட்டுப் பட்டியல்களை நேரகாலத்துடன் சமர்ப்பிக்கும் பட்சத்தில், முதலாம் திகதிக்கு முன்னர் பருவகாலச் சீட்டுகள் மாணவர்களுக்கு கிடைக்கக் கூடியதாக வழங்க முடியும் என்பதை அறியத் தருகின்றேன்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## திருமறைக் கலாமன்ற கலை நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்13

யாழ்.திருமறைக்கலாமன்றம் மாதாந்த 'கலை நிலா' அரங்க கலை நிகழ்ச்சிகள் எதிர்வரும் 23ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலைநிகழ்ச்சியில் நடனம், கிற்றார் இசை, நாட்டுக் கூத்து (ஏகலைவன்) என்பன மேடையேற்றப்படவுள்ளதாக திருமறைக் கலாமன்ற பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (க-6)

## நீர் விநியோக ஆரம்ப வைபவம்

நவாலி,ஜூன்13

வடலியடைப்பு கலைவாணி முன்பள்ளி நிலையத்துக்கான நீர் விநியோக ஆரம்ப வைபவம் இன்று மாலை 4 மணிக்கு கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் க.தர்மராசா தலைமையில் முன்பள்ளி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வலி. தென்மேற்குப் பிரதேசசபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் நீர் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார்.

சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (க-7-100)

## மீன் விலை விவரப் பட்டியல் மக்கள பார்வைக்கு

நெடுந்தீவு ஜூன்13

நெடுந்தீவு பொதுச் சந்தையில் உள்ள மீன் விற்பனைப்பகுதியில் மீன்களுக்கான கட்டுப்பாட்டு விலை விவரப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மீன் வியாபாரிகள் தாங்களாகவே கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்து அதன் விவரப் பட்டியலைப் பார்வைக்கு வைத்துள்ளனர். எனினும சில சமயங்களில் அந்த விலைகளை அவர்களே புறக்கணித்து விடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-111)

## நாடளாவிய ரீதியில் சைவ நெறித்தேர்வு

சுன்னாகம்,ஜூன்13

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை இவ்வாண்டுக்கான சைவ நெறித் தேர்வுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

தரம் 2 முதல் தரம் 12 வரையுள்ள பாடசாலை மாணவர்களுக்கென நாடளாவியரீதியில் இத்தேர்வு நடைபெறவுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி தேர்வு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முனபாக அனுப்பி வைக்குமாறு சபையின் தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி கேட்டுள்ளார். (ம-27)

## உப-அலுவலகம் இடம்மாற்றம்

தென்மராட்சி,ஜூன்13

நெல்லியடி முருகன் கோயிலுக்கு அருகில் இயங்கி வந்த தென்மராட்சிப் பிரதேச செயலக உப அலுவலகம் நேற்றுத் தொடக்கம் மாலி சந்தியிலுள்ள தனியார் கட்டடமொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது. (3-117)

---

## முதலாம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



உதயம் 15 - 06 - 1928

அஸ்தமனம் 13 - 06 - 2000

### அமரர் வைத்திலிங்கம் குமரகுரு

(முன்னாள் கிராமசபை அங்கத்தவர், மண்டைதீவு)

குற்றமற்ற தீபமாய் ஒளி ஈந்தாய் ஐயா!
குறைகளற்ற மாந்தனாய் நீர் வாழ்ந்தீர்!
குணம் காக்கும் குலமகனாய் நீரிருந்தீர்!
குலம் தழைக்கச் செய்து விட்டு எங்கு சென்றீர்?
நினை இழந்து நாம் நித்தம் வாடுகின்றோம்!
இன்னருள் தேடி நீர் இறையுலகம் போனீரோ?
ஆண்டொன்று முடிந்தாலும் மனம் ஆற முடியவில்லை ஐயா!
எம் நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவுமிருக்கும்.
தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
*அண்ணாநகர், சென்னை.*

*6ஆம் வட்டாரம்,*
*மண்டைதீவு.*

(88977)

---

## நீங்கா நினைவில் ஐந்தாண்டு



அன்னை மடியில் 21 - 02 - 1977

அமரன் அடியில் 13 - 06 - 1996

### செல்வன் வேலு சனகன்

(முன்னாள் மாணவன், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

ஐந்தாண்டுகள் ஆனாலும் எம்துயர் மாறாது!
என்றும் உன் நினைவுகளோடும்
உணர்வுகளோடும் கலந்து வாழும் ....

அப்பா, அம்மா,
அக்காமார், தங்கை.

*அம்பலவானர் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*

(88966)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் ஆதீன குரு

**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் அவர்கள்**

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாகத் தெரிவாகியதையிட்டு நயினை மணிபல்லவ கலாமன்றத்தினராகிய நாங்கள் அவரை மனதாரப்பாராட்டி வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல நயினை அம்பிகையின் நல்லாசிகள் தொடர்ந்து கிடைக்க வேண்டுகின்றோம்.

நயினாதீவு
மணிபல்லவ கலாமன்றத்தினர்.

(88973)

---


கிளி/மாவட்ட பல்கலை மாணவர்கள் கல்வி வளர்ச்சி நிதிக்காக
பருத்தி நகர் சாண்டோ.M.துரைரத்தினத்தின்
மாணவன் N.விஜயமோகனின்

வீரதீரச் சாகஸச் செயல்கள்

இடம்:- பல்கலைக்கழக மைதானம்
நாள்:- 16-06-2001 (சனிக்கிழமை)
நேரம்:- மாலை 2.30 - 4.30 மணி
பிரவேசக் கட்டணம் 30/-மட்டுமே!

விளம்பர அன்பளிப்பு:- சிறிராஜன் பான்சி ஹவுஸ்
*65,66 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.*

(88967)


---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 14 - 02 - 1921

விண்ணில் 25 - 05 - 2000

### திருமதி சண்முகம் துரையம்மா

தேவுலகு வரவேற்க தேவரெல்லாம் உபசரிக
பூவுலகு விடைகொடுக்க புண்ணியனார்
துரையம்மா சீவிய நாள் முடித்து பத்திரகாளித்
தாயார் திருவடியை மேவிய முதலாம் ஆண்டு
மெல்ல மறைந்ததுவே! அன்பின் உருவாய்
அறிவின் சுடராய், பண்பின் நிறைவாய்,
பாசத்தின் பிறப்பிடமாய் எமக்கெல்லாம்
நல்வழிகாட்டி, எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள்
அன்பு அம்மா எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும் தங்கள் நினைவு எங்கள்
இதயம் விட்டு நீங்காது. உங்கள் ஆத்ம
சாந்திக்காகப் பத்திரகாளித்தாயாரை
வேண்டுகின்றோம்.

இன்று (13-06-2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்பு மகள்
தங்கராஜா விஜயராணி

*"விஜயகிரி"*
*நாவலடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.*

(88857)

---

## மரண அறிவித்தல்

### பசுபதி சோமசுந்தரம் (P.S.)

(பிரபல பழவர்த்தகர், மார்க்கட் - யாழ்ப்பாணம்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வதிவிடமாகவும் கொண்ட பசுபதி சோமசுந்தரம் அவர்கள் நேற்று முன்தினம்(11-06-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தனேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கமலரட்ணாவதி -சுந்தரலிங்கம், சிவராஜசிங்கம்(**U.K**), நகுலபாஸ்கரன்(**U.K**), தர்மகுணசிங்கம்(கொளரி அழகுமாடம்), திருமதி. சகஸ்தினாவதி -பத்மநாதன், திருமதி லோகஜீவி - தவராஜசிங்கம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:- சோ.தர்மகுலசிங்கம்
(மகன்)

*236, நாவலர் வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.*

(88972)

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்
வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு - யாழ்.அலுவலகம்

## பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆள்சேர்ப்பு

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களில் பகல், இரவு நேரங்களில் காவற்கடமை புரிவதற்கு தகுதி வாய்ந்த ஆண்/பெண் இருபாலாரிடமிருந்து பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

*குறைந்த பட்ச கல்வித்தகைமை* : க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.
*உயரம்* :5அடி 6அங்குலம்.
*வயதெல்லை* : 18 - 40.

விளையாட்டுத்துறையில் திறமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுய விவரங்களைக்கொண்ட விண்ணப்பங்களை, மனிதவள அபிவிருத்திப் பிரிவு, வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு - யாழ்.அலுவலகம், 250/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும். தபாலின் இடது பக்க மேல் மூலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆள்சேர்ப்பு எனக் குறிப்பிடவும்.

**விண்ணப்ப முடிவு திகதி பிற்போடப்பட்டுள்ளது.**

மனிதவள அபிவிருத்திப் பிரிவு,
வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு - கிழக்கின்
தமிழ் விவகாரங்கள் அமைச்சு, யாழ்.அலுவலகம்,
250/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(89003)

## கண்ணீர் அஞ்சலி

### சோமசுந்தரம் வடிவேலு B.Sc.

(முன்னாள் அதிபர், யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்)

அன்னாரது மறைவையிட்டுத் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாருக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம்
வேலணை.
(88999)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மரியம்மா எட்வேட் பிறின்ஸ்

(இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)

ஓடி மறைந்தது நான்கு வருடங்கள்!
ஓடாமல் நிற்பதோ உங்கள் நினைவுகள்!
புண்ணாகி மனம் எல்லாம் புழுவாய்த் துடிக்கின்றோம்!
ஆறவில்லை எம்துயரம், இன்னும்
காயவில்லை எம் கண்ணீர்!

*53, Temple Road,*
*Jaffna.*

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(88998)

## பொருள்காட்சி

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலய சமூகக் கல்வி தின விழாவும் ஆரம்பக்கல்வி பொருள் காட்சியும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.தவராசாவும் சிறப்பு விருந்தினராக சேர்.வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலய அதிபர் கு.கணேசலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-5)

## 31 ஆசிரியருக்கு பதவி உயர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 31 ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் சேவை தரம் 2-1க்கு 19 ஆசிரியர்களும், தரம் ஒன்றுக்கு 12 ஆசிரியர்களும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (உ-117)


**ராஜா** யாழ்ப்பாணம்
பிரசாந்த், சிம்ரன்,
கரண், விவேக்
மற்றும் பலர் நடித்த
கண்ணெதிரே தோன்றினாள்
தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
20.06.2001 முதல்
சிட்டிசன்
(C/17080)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
அர்ஜுன், அபிராமி,
பிரகாஷ்ராஜ் நடித்த
வானவில்
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
(88696)

**ஸ்ரீ செல்வா**
சினிமா, யாழ்ப்பாணம்.
முரளி, ரம்பா, தேவயானி,
நடித்த
ஆனந்தம்
(புதிய வெளியீடு)
காட்சிகள் : 10.30, 2.30 (பழைய நேரம்)
(குடும்பச்சித்திரம்)
(C/17081)

**SHAMROCK**
A/L 2002
C/MATHS
ஆரம்பம்: 13/6 - புதன்
★ஒருதள விசைகள் - 6.15 a.m.
★நிகழ்தகவு - 5 p.m.
A/L 2003
சார்புகள்
ஆரம்பம்: 15/6 வெள்ளி 6.15 a.m
Mr.தவசேகர் B.Sc.
A/L 2003
GENERAL CHEMISTRY
ஆரம்பம் 14/6 வியா - 5p.m.
Mr.T.பாலச்சந்திரன் B.Sc.
PHY:- Mr.ஸ்பெல்மன்
(17078)


## அவசர கலந்துரையாடல்

### இலங்கை நிர்வாக சேவை (வடக்கு - கிழக்கு) பரீட்சை
### S.L.A.S.

இலங்கை நிர்வாக சேவை (விசேட) திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதில் பாதிக்கப்பட்ட, ஏற்கனவே அரச சேவையில் உள்ள, 30 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்.
*காலம்:-* 15-06-2001 (வெள்ளி), பி.ப.2.00 மணி
*இடம்:-* புதிய உயர் கலைக் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.
- ஒருங்கிணைப்பாளர்கள்.
(88997)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி கௌரிப்பிள்ளை உமாமகேஸ்வரன்

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌரிப்பிள்ளை உமாமகேஸ்வரன் நேற்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உமாமகேஸ்வரனின் பாசமிகு மனைவியும் திருமதி சௌந்தரவல்லி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), திருமதி கோமளவல்லி (ஆசிரியை, யூனியன் கல்லூரி), நிர்மலானந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற புகையிரதப்பகுதி உத்தியோகத்தர்), தேவதாசன் (இ.போ.ச. உத்தியோகத்தர், கோண்டாவில் டிப்போ), வாசுகி (அரசினர் வைத்தியசாலை, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் மாதங்கி (நுண்கலைப்பீட மாணவி), கங்காசுதன், கௌரிசங்கர் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் முருகேசு, காமாட்சிப்பிள்ளை, தங்கமுத்து, நடராசா, விசாலாட்சி ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தங்காலிக இல்லமான இணுவில் தெற்கு, இணுவிலில் இன்று (13.06.2001) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி சௌந்தரவல்லி தர்மலிங்கம்
(மகள்)

நிரந்தரமுகவரி:
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.*

தற்காலிகமுகவரி:
*பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி,*
*நரசிங்க வயிரவர் தேவஸ்தானம் முன்பாக,*
*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*
(88996)

### இளையதம்பி நாகரத்தினம்

கந்தரோடையைச் சேர்ந்த இளையதம்பி நாகரத்தினம் நேற்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லத்துரையின் சகோதரரும் மங்கையர்க்கரசி, லோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ம.நாகராசா (ரெலிகொம், யாழ்ப்பாணம்), லோ.விக்கினேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாளினி, தயாளன், தயாகரன், தயாரூபன், சர்மிலன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2001) புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் கந்தரோடை சங்கன்புலவு மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.மங்கையர்க்கரசி
(மகள்)
(C/17079)

### திருமதி தம்பிமுத்து சரஸ்வதி

சுன்னாகம், மயிலணியைச் சேர்ந்த திருமதி தம்பிமுத்து சரஸ்வதி நேற்று (12-06-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுன்னாகம் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் நவரட்ணம் (சங்கிலியப்பா) - தங்கமுத்துவின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் (இளைப்பாறிய ஆசிரியர், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி) அன்பு மனைவியும் சிறுப்பிட்டி மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான திரு.திருமதி பெரியதம்பியின் அன்பு மருமகளும் கருகம்பனையைச் சேர்ந்த திரு.திருமதி மயில்வாகனத்தின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் "சாந்தபுரி", மயிலணி, சுன்னாகத்தில் நேற்று (12-06-2001) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.சிற்றம்பலம்
(திருச்சி - மருமகன்) (சேவையர்),
சி.ஆனந்தகிருஷ்ணா (பேரன்)

*"சாந்தபுரி",*
*மயிலணி,*
*சுன்னாகம்.*
(89004)

### பூதர் இராமு

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு மயிலங்காட்டை தற்காலிக முகவரியாகவும், புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஞானவைரவர் ஆலய முன்னாள் பூசகரும் ஆகிய பூதர் இராமு நேற்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

இவர் காலஞ்சென்றவர்களாகிய பூதர் - சிந்தாமணி தம்பதிகளின் செல்வப் புதல்வரும் பொன்னம்மாவின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் மைத்துனரும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், மகேஷ்வரியின் அன்புத் தந்தையும் சரவணமுத்துவின் அன்பு மாமனாரும் நாகமுத்து, காலஞ்சென்ற சின்னத்தம்பி, நடேஸ், மகாலிங்கம்(ஜேர்மனி) தவமணி (வவுனியா), காலஞ்சென்ற செல்வமணி மற்றும் குணசேகரம் (ஜேர்மனி) ஆகியோரின் தாய்மாமனும், கிருஷ்ணர், சிவபாக்கியம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (12.06.2001) செவ்வாய்க்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் குப்பிளான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சகோதரி,
மருமக்கள்.

*ஏழாலை தெற்கு,*
*மயிலங்காடு.*
(C/17080)

உ

## மனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் வைகாசித் திங்கள் 30 ஆம் நாள் இன்று (13.06.2001) புதன்கிழமை நண்பகல் 12மணிமுதல் 1.00 மணிவரை வரும் சுப வேளையில் எம்மால் அமைக்கப்பெற்ற

### தர்ஸினிதன்

என்னும் இல்லத்தில்
குடிபுக நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது சுற்றத்தார், நண்பர்கள்
அனைவரும் குடும்ப சகிதம் சமுகம் தந்து எமது மனையை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*57,கே.கே.எஸ்.வீதி,*
*கொக்குவில்.*

தங்கள் நல்வரவை நாடும்:
M.பார்த்திபனும் குடும்பமும்.
(உரிமையாளர்:- வேல் மிக்சர்)
(C/17076)

சமாதான முயற்சிகளில்

# புலிகளின் ஈடுபாட்டை அரசு புறந்தள்ளுகின்றது

## விநாயகமூர்த்தி எடுத்துரைப்பு

கொழும்பு,ஜூன்13

சமாதான முயற்சிகளில் பங்குபற்றுவதற்கு விடுதலைப் புலிகள் இதயசுத்தியுடன் முன்வந்துள்ளனர். ஆனால் அந்த முயற்சிகளை புறம்தள்ளும் வகையில் அரசு செயற்பட்டு வருகின்றது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி இப்படிக் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் லிண்டா டபீல்ட் அம்மையாரை நேற்றுச் சந்தித்தபோதே அவர் மேற கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இதயசுத்தியுடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட போதும் அதை ஏற்காத வகையில் இலங்கை அரசு செயற்படுகின்றது.

புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கின்றது. புலிகளை அழிக்கும் நோக்கத்தோடு அரசு செயற்படுகின்றது என்பதை அதன் செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.

பேச்சுக்கான வாய்ப்புக்களை உருவாக்குவதில் முழுமூச்சுடன் ஈடுபட்ட நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மையும் கூட புறம் தள்ளிவிட்டது அரசு - இப்படி அவர் தெரிவித்தார்.

புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி ஸ்ரீலங்கா அரசுக்கு பிரிட்டன் உட்பட மேற்குநாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

குடாநாட்டில் இராணுவ முகாம்களாகியுள்ள பிரபல பாடசாலைகளில் இருந்து படையினரை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

(உ-3)

# டாக்டர்களின் கோரிக்கையை ஏற்கக் கோருகின்றார் மாவை

கொழும்பு,ஜூன்13

வடக்கு - கிழக்கில் வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ள வைத்தியர்களின் கோரிக்கைகளை ஏற்று அவர்களுக்கான கொடுப்பனவுகளை பாரபட்சமின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா சுகாதார அமைச்சரைக் கோரியுள்ளார்.

சுகாதார அமைச்சர் டபிள்யூ.டி.ஜே. செனவிரத்னவுக்கு அனுப்பியுள்ள 'பகஸ்' செய்தியிலேயே அவர் இப்படிக் கேட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் டாக்டர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்குவதில் காட்டப்படும் பாரபட்சம் குறித்துத் தங்களுடன் ஏற்கனவே கதைத்துள்ளேன். அதை ஏற்று அந்தக் கொடுப்பனவுகளை வழங்க தாங்கள் உறுதிமொழி வழங்கிய போதும், இதுவரை அவர்களுக்கான நியாயமான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இந்தக் கொடுப்பனவை வழங்கும்படி கோரி டாக்டர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளதால், வடக்கு - கிழககில் உள்ள ஆயிரக்கணக்கான ஏழை நோயாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே நோயாளர்களின் அவலங்களைக் களையும் வகையில் டாக்டர்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் காணும்படி கோருகிறேன் - என்றுள்ளது.

(உ-3)

## டாக்டர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் ஈ.டபிள்யூ. காமினி ஜயசுந்தர யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்களை தனது அலுவலகத்துக்கு அழைத்து வேலைநிறுத்தத்தைக் கைவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

தமது தலைமைச் சங்கத்தின் முடிவை எதிர்பார்த்திருப்பதால் வேலை நிறுத்தத்தைக் கைவிடமுடியாது என்று டாக்டர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

இதேவேளை நேற்றும் யாழ். போதனா வைத்தியசாலை உட்பட மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைகள் மட்டுமே நடைபெற்றன.

(உ-5-15-139)


# சுடர் ஒளி

17-06-2001

## இவ்வாரத்துச் சுடர் ஒளியில்

☆ 'உயர் மட்டப் பங்களிப்பு அரசின் புளியங்கொப்பு' சொல்ஹெய்மை அரசு புறந்தள்ளியதற்குப் புலிகள் கண்டனம்.

☆ வடக்கே வரும் விமானங்களுக்கு வில்பத்துக் காட்டில் பொறியா?

☆ கிழக்கில் பெரிய யுத்தம் வெடிப்பதற்கான அறிகுறிகள்.

☆ முஸ்லிம் காங்கிரஸ் – நூ. ஆ. கட்சிகளிடையே மோதல்.

☆ அதிகார பலப் பரீட்சைக்களத்தில் நாடாளுமன்றமும் நீதிமன்றமும்

☆ தமிழக ஆளுநருக்கு எதிராக மத்திய அரசு தலையீடு இல்லை.

☆ ஆஞ்சநேய வழிபாடுக்கு அனுபூதிமான்கள் உடன்பாடு 'அன்பே சிவத்தை' 'வம்பே சிவமாக்கும்' சைவர்கள் செய்வதே சிவத் துரோகம்.

☆ நேபாளத்தில் புதிய மன்னரின் மகன் மீது பெருமளவு சந்தேகம்.

☆ தட்டுகிறார் ஆயர் திறக்கப்படுமா பாதை?

☆ உள்ளூர் கெட்டிக்காரர்கள் வெளிநாடுகளில் மகாமட்டம்.

☆ மற்றும் முத்தமிடும் ரோஜா இதழ்கள் தொடர்கதை, சிறுகதை, ஆந்தையாரின் க்ரைம் டயறி, அரசியல் அம்பலம், சினிமா, விளையாட்டுப் பகுதி உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள். (C/17075)


## புதிய உறுப்பினர் நியமனம்

தென்மராட்சி,ஜூன்13

சாவகச்சேரி நகரசபைக்கு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஆழ்வான் கந்தப்பு அங்கத்தவராக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் சி.நடராசாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நகரசபை அங்கத்தவராக இருநத இராமலிங்கம் சிவராசா மூன்று மாத காலம் கூட்டங்களுக்கு சமுகமளிக்காத காரணத்தினால் தாமாகவே பதவி விலகியதாக கருதப்பட்டு புதிய அங்கத்தவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(உ-3-117)

## பாடசாலை மாணவர் பார்வையிட வசதி

யாழ்ப்பாணம்,ஜூன்13

அண்மையில் திருநெல்வேலியில் புதிதாக மீள நிர்மாணிக்கப்பட்ட வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்தினை பாடசாலை மாணவ மாணவியர்கள் தமது வளிமண்டலவியல் சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள நேரடியாகச் சென்று பார்வையிடலாம் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட உதவி அமைப்பாளர் கே.நிஷாந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்தகால யுத்த நடவடிக்கை காரணமாக 1993ஆம் ஆண்டு முதல் முற்றிலுமாகத் தொழிற்படாதிருந்த யாழ். வளிமண்டல ஆராய்ச்சி நிலையத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பலனாக மீண்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (-3)

## நிவாரண விநியோகம்

தென்மராட்சி,ஜூன்13

பளைப்பிரதேச மக்களுக்கான மே மாதத்திற்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்கள் அந்தந்தக் கிளைக் கடைகளில் நேற்று முன்தினம் முதல் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(உ-117)

## 'சிற்றி ஓவ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலை நோக்கிப் புறப்படத் தயாரானது.

எனினும் கடும் காற்று, கடற்கொந்தளிப்பு என்பவை காரணமாக கப்பல் தொடர்ந்து பயணிக்காமல் துறைமுகததுக்த வெளியே நள்ளிரவு வரை நங்கூரமிட்டிருந்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

காலநிலை சீரான பின்னரே திருகோணமலை நோக்கிக் கப்பல் புறப்படும் என்று கப்பல் முகவர் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## அரசில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதாகவும் -

முஸ்லிம் காங்கிரஸின் மூத்த உறுப்பினர்கள் பலர் ஹக்கீமின் இந்த முடிவை ஆதரிப்பதாகவும் - விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

"தேர்தல் காலத்திலும் ஆட்சியை அமைக்க முற்பட்ட காலத்திலும் எமக்குப் பல வாக்குறுதிகள் தரப்பட்டன. ஆனால் அரசு அவற்றையெல்லாம் காற்றில் பறந்து போக விட்டுவிட்டது. மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன் கல்முனையைத் தனி நிர்வாக மாவட்டமாக மாற்றித் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் அதைத் தட்டிக் கழிப்பதற்கு இப்போது சாக்குப் போக்குச் சொல்லப்படுகின்றது. இந்த அரசில் தொடர்ந்து இருப்பது பயனற்றது என்றே கருதுகின்றோம். கட்சியின் பிரதேசக் கிளைகளும் இத்தகைய தீர்மானங்களையே நிறைவேற்றி எமக்கு அனுப்பி வைக்கின்றன" - என்று கட்சியின் உயர் அரசியல்பீட உறுப்பினர் ஒருவர் கூறினார்.

"அமைச்சர் ஹக்கீமையும் ஏனையோரையும் சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்கவும் ஏனைய அரச பிரமுகர்களும் பகிரங்கமாக விமாசித்து வருகின்றார்கள். இனிமேலும் நாம் சகிக்க முடியாது. எங்கள் ஆதரவில் ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் எங்கள் மீது குதிரை விடுவதை நாம் அனுமதிக்க முடியாது" - என்று மற்றொரு உறுப்பினர் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் நேற்றும் நள்ளிரவு வரை கட்சியின் தலைமையகத்தில் மந்திராலோசனை நடத்திக் கொண்டிருந்தனர். (உ)

# தடைசெய்யப்பட்ட இயக்கமாக புலிகள் பேச்சில் பங்குபற்ற முடியாது

## ரெலோ தலைவர் செல்வம் கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜூன்13

விடுதலைப் புலிகள் ஒருபோதும் பலவீனம் அடைந்து விடக்கூடாது. புலிகள் பலவீனமடைவது தமிழ்மக்கள் பலவீனமடைவதற்கு ஒப்பானதாகும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அடைக்கலநாதனிடம் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துக் கூறுகையில் -

தமிழ் மக்களைப் பொறுத்தவரை தற்போதைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்படும் எந்த ஒரு முயற்சிகளையும் அனுமதிக்கக் கூடாது.

தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் இன்று சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டுள்ளது என்றால் அதற்கான பெருமை விடுதலைப் புலிகளையே சேரும். அதனால்தான் அரசு கூட இன்று விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆகவேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்க் கட்சிகளுக்குமிடையே ஏற்பட்ட சில துரதிஷ்டவசமான நிகழ்வுகளுக்காக புலிகளைப் பலவீனப்படுத்த வேண்டுமென்று யாராவது நினைப்பார்களேயானால் அது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு விரோதமானது.

புலிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவே பேச்சுக்களில் கலந்து கொள்கின்றார்கள். அவர்கள் தடை செய்யப்பட்ட அமைப்பாகக் கலந்து கொள்வதைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை.

இதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் பேசஇருப்பது தமிழ் மக்களுடைய பிரச்சினைகளேயாகும்.

எனவே அவர்கள் மீதான தடையை அரசு உடனடியாக நீக்க வேண்டும் - இப்படி அவர் கூறினார்.

(உ-3-4)

# வேதாகமப் போட்டியில் பரு.தேவசபைக்கு வெற்றி

யாழ்ப்பாணம்,ஜூன்13

அகில இலங்கை வேதாகமச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடத்திய வருடாந்த வேதாகமப் போட்டியில் இம்முறை கனிஷ்ட பிரிவில் பருத்தித்துறை தேவசபையும், (ஏ.ஓ.ஜி.), சிரேஷ்ட பிரிவில் கட்டுகஸ்தோட்டை சென். அன்ரனிஸும் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டன.

கடந்த சனிக்கிழமையன்று கொள்ளுப்பிட்டி மெதடிஸ் தேவாலயத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன.

பருத்தித்துறை தேவசபையின் கனிஷ்ட பிரிவுத் தலைவர் ஜோசுவா சிதம்பரப்பிள்ளை போட்டியில் அதி உச்சப் புள்ளிகளைப் பெற்றதற்காக விசேட விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

வேதாகமச் சங்கத்தின் சார்பில் யாழ்.மாவட்டத்திற்கான போட்டிகளை யாழ் வை.எம்.சீ.ஏ. அமைப்பு முன்னர் நடத்தியிருந்தது. அதில் கனிஷ்ட, சிரேஷ்ட இரு பிரிவுகளிலும் பருத்தித்துறை தேவசபையே முதல் இடங்களைப் பெற்றுக்கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

# துன்னாலையில் கோஷ்டி மோதல் ஒன்பது பேருக்கு வாள்வெட்டு!

## காயமடைந்தோர் மந்திகை ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,ஜூன்13

துன்னாலையில் இரு கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்களிடையே ஏற்பட்ட கைகலப்பு பெரும் மோதலாக வெடித்ததில் வாள்வெட்டுக்கு இலக்காகி ஒன்பது பேர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை ஆரம்பமான இந்த மோதல் நேற்று மாலை வரை தொடர்ந்ததாகவும் காயம் அடைந்தவர்கள் தெரிவித்தனர்.

மாணிக்கம் சிவபாதம் (வயது 52), செல்லன் விநோதன் (வயது 32), மணியன் சந்திரகுமார் (வயது 20), தங்கவேல் மதன் (வயது 19), கிருஷ்ணர் ஜெயசீலன் (வயது 31), தம்பிராசா சந்திரா (வயது 38), கந்தன் செல்லன் (வயது 54), பொன்னன் கந்தசாமி (வயது 47), குணசேகரம் குணதீபன் (வயது 20) ஆகியோரே காயம் அடைந்தவர்களாவர்.(உ-3-117)

## கைதாவோரை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் கைது செய்யப்படுபவர்களை தகுந்த முறையில் நீதிவான் முன் ஆஜர் செய்வதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுவந்த முறைப்பாடுகளை ஆராய்ந்த இந்தக் குழு -

எதிர்காலத்தில் இந்தச் சட்ட விதிகள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவது குறித்துக் கவனம் செலுத்தும்படி சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்படுபவர்கள் தொடர்பான விவரங்களைச் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் அங்கு பார்வைக்கு வைக்க வேண்டும் என்றும் அந்தக் குழு பணித்துள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இரு இளைஞர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை நேற்று உயர்நீதிமன்றத்தில் இடம்பெற்ற சமயமே பிரதம நீதியரசர் இந்த விடயங்களை வெளியிட்டார். (உ-3)


# மரண அறிவித்தல்

## சிறிநிதி கபில்

(வயாவிளான் ம.ம. வித்தியாலய ஆண்டு 10 மாணவன்)

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறிநிதி கபில 10.06.2001 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் சிறிநிதி - நிர்மலா தம்பதிகளின் அன்பு மகனும் கதீஸ், கென்சன், கனிஸ்ரன், திவ்யா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிருஸ்ணபிள்ளை, கமலம், ஐயாத்துரை, அரியமணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2001) புதன்கிழமை மு.பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு விலங்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு கிழக்கு,*
*ஊரெழு.*
*T.P : 070 213085*
*070 212976*

தகவல்:
ஐ.மகேந்திரம்
(பெரிய தகப்பன்)

(C/17082)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.